Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/1187)


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 27 வெள்ளிக்கிழமை (13.01.2012) பக்கங்கள் 16 ஓசை - 104

21ஆம் நூற்றாண்டில் சீனா!




07

சேவைக்கு 6 புதிய விமானம்




08



மக்கள் சேவை வழங்க...

05




குறைந்த செலவில் சாரதிப் பயிற்சி

14



## யாழ்ப்பாணத் திருவிழா இன்று கோலாகல ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு நடத்தப்படும் யாழ்ப்பாணத் திருவிழா இன்று யாழ்.நகரில் கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

யாழ்.நகரில் துரையப்பா விளையாட்டு மைதானத்துக்கு அண்மையில் உள்ள யாழ்.மாநகரசபை வளாகத்தில் இன்று முதல் மூன்று தினங்கள் நடைபெறவிருக்கும் இந்த யாழ்ப்பாணத் திருவிழாவுக்கான அனைத்து ஏற் பாடுகளையும் யாழ்.மாநகரசபை மேற்கொண்டுள்ளது.

இதனை முன்னிட்டு கலை நிகழ்வுகள், இலக்கியப் போட்டிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் என்று பல்வேறு கோலாகல அம்சங்கள் இவ்விழாவில் அரங்கேறவுள்ளது. இதனையொட்டி யாழ். நகர மேயர் நேற்று விசேட

(15ஆம் பக்கம் பார்க்க)

## மாணவனை அச்சுறுத்தியவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவன் மீது அச்சுறுத்தல் மேற்கொண்ட குற்றச்சாட்டுக்காக சிவில் பாதுகாப்பு உறுப்பினர் ஒருவர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுப்பகல் 2.00 மணியளவில் ராஜா திரையரங்கின் முன்னால் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவனான கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த ராஜவரோதயன் .கவிராஜன் (வயது-26) என்பவர் தனது கற்றல் நடவடிக்கைக்காக யாழ். பொது நூலகம் சென்று தனது இருப்பிடத்துக்கு திரும்பும் வழியில் திடீரென இடைமறித்த பிரஸ்தாப உறுப்பினர் குடிபோதையில் தன்வசம் வைத்திருந்த

(15ஆம் பக்கம் பார்க்க)

## புலி முத்திரைக்கு பிரித்தானியாவில் தடை

(பிரித்தானியா)

புலிகளின் தலைவர் பிரபாகரனின் உருவம் தாங்கிய முத்திரைகளை பிரித்தானியாவிலுள்ள அரச தபாலகங்களில் பெற்றுக் கொள்ள முடியாது என பிரித்தானிய அரச தபால் சேவைப் பிரிவு இலங்கைக்கான பிரித்தானிய உயர் தூதுவரிடம் தெரிவித்துள்ளது. பிரபாகரனின் உருவம் பொறித்த முத்திரைகள் குறைந்தளவிலேயே பிரித்தானியாவில் அச்சிடப்பட்டுள்ளன என்றும் அவை எந்தக் காரணம் கொண்டும் உத்தியோகபூர்வ செயற்பாட்டுக்கு உரியவை அல்ல என்றும் தெரிவித்துள்ள பிரித்தானிய அரச சேவைகள் நிறுவனம், இந்த விடயம் தொடர்பில் இலங்கை அரசிடம் மன்னிப்புக் கோருவதாகவும் இலங்கைக்கான பிரித்தானிய உயர் தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

# இறுதி யுத்தம் புரிந்த இரு தரப்பும் மனித உரிமைகளை மதிக்கவில்லை

## சுயாதீன விசாரணை கோருகிறது கனடா

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையில் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்த பூரண தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. எனவே யுத்தத்தில் ஈடுபட்ட இருதரப்பு மீதும் சுயா தீனமான சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்ற கனடா நாட்டு அரசு வலியுறுத்தியுள்ளது.



இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழு முழுமையான தகவல்களை வெளியிடவில்லை என கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் தெரிவித்துள்ளார். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பில் கனடாவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் கனேடிய வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள

(15ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கூட்டமைப்பை சந்திக்க வாய்ப்பு இல்லை?



(கொழும்பு)

அடுத்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்யவிருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவதற்கான திட்டங்கள் எதுவும் இதுவரை இல்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கைக்கான பயண நிகழ்ச்சி நிரலின்படி கூட்டமைப்பு பிரதிநிதிகளுடனான சந்திப்புக் குறித்தோ அல்லது பேச்சுவார்த்தை குறித்தோ எந்தக் குறிப்புக்களும் இடம்பெறறிருக்கவில்லை என்று புது

(15ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் மீனவர்கள் 10 பேர் கைது நேற்று விடிகாலையில் அதிரடி

யாழ்.குடாக்கடலில் தடை செய்யப்பட்ட ட்ரோலர் படகு மூலம் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 3 ட்ரோலர் படகுகளும், 10 மீனவர்களும் யாழ்.மாவட்ட நீரியல்வள அதிகாரிகளாலும் மற்றும் பொலிஸாரினாலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை யாழ்.பொலிஸ் விசேட அணியினரும், யாழ். நீரியல் வளத்துறை அதிகாரிகளும் ஒன்றிணைந்து குருநகர் பகுதிக் கடற்பரப்பில் திடீர்ச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின்போதே இந்த ட்ரோலர் படகுகள் அதிகாரிகளிடம் சிக்கியது. இதன்போது பொலிஸாரால் கைது செய்யப் பட்ட மீனவர்கள் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். (எஸ், 68)

## பெறுபேறுகளில் குளறுபடி தீர்வு இன்னும் இல்லை ஆசிரியர் சங்கம் குமுறல்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவானது பெறு பேறுகளின் குளறுபடிகளை இன்னும் தீர்க்கவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சுமத்து கின்றது. குழுவின் அறிக்கையை உடனடியாக பகிரங்கப்படுத்துமாறு அந்த சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வெளியிட் டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயர்தர பெறுபேறுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு பரீட்சை திணைக்களத்தின் கணினி பிரிவின் மீது குற்றம் சுமத்துவதை தவிர பெறுபேறுகளை மீள

(15ஆம் பக்கம் பார்க்க)

### ஊதிய உயர்வுக்கு அரசு இணக்கம்

(கொழும்பு)

சம்பள உயர்வு வழங்கும்படி மின்சார சபை ஊழியர்களால் விடுக்கப்பட்ட தொடர்ச்சியான கோரிக்கைக்கு இணங்கி அவர்களுக்கு 18 வீத சம்பள உயர்வை வழங்க அரசு முன் வந்துள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு புதிய மூன்று மாடிக் கட்டடம்

### அடிக்கல் நாட்டினார் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலையத்துக் காக புதிதாக அமைக்கப்பட விருக்கும் மூன்று மாடிக் கட்டடத் தொகுதிக்கான அடிக் கல்லை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாய பூர்வமாக நட்டி வைத்துள்ளார்.

யாழ்.நகரில் நேற்று அதி காலை 6.44 மணிக்கு புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக் கல்லை அமைச்சர் நாட்டி வைத்தார்.

அமைச்சரைத் தொடர்ந்து வட பகுதிக்கான சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர்

(15ஆம் பக்கம் பார்க்க)

# அவலங்களை அரசியலாக்குபவர்கள் அம்மக்களுக்கு உதவ முன்வருவதில்லை




(கிளிநொச்சி)

மக்களின் அவலங்களை வெறும் அரசியலுக்காகவும் சுய நலங்களுக்காகவும் பேசிக்கொண்டிருப்பவர்கள் அவர்களுக்கு உதவ முன்வர மறுக்கிறார்கள் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பச்சிலைப்பள்ளி தம்பகாமத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தினால் 18 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பெற்ற முன்பள்ளியினை திறந்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் மக்களின் அரசியல் அபிலாசைகள் வெல்லப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். அப்போதுதான் மக்கள் இதுவரை இழந்தவைகளுக்கு அர்த்தம் பிறக்கும். அந்த வேளையில் நாம் முழுமையான அபிவிருத்தியடைந்த தேசத்தில் வாழ வேண்டும். எனவேதான் அரசியல் உரிமைகளுக்கானதும் தேசத்தின் அபிவிருத்திக்குமானதுமான செயற்பாடுகளை நாம் நிதானமாக முன்னெடுத்து வருகின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தலைவர் டொமினிக் அன்ரன்யூட், பிரதேச சபையின் உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன் தியாகராசா ஆகியோரும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் முகுந்தன், பிரதேச சபை செயலர் சிவப்பிரகாசம், கிளிநொச்சி மாவட்ட மீள்எழுச்சித் திட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர் விஜய கிருஸ்ணன் கிராமசேவையாளர் புவனராஜா பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் மார்க்கண்டு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சிவனேசன் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

# மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை நேற்றுக் காலை 10.00 மணிக்கு உத்தியோக பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

16 வருடங்களின் பின்னர் இப்பாடசாலை சொந்த இடத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலையை அதிபர் சிவநேசன் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா யாழ் வலய முறைசாரப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர், பூம்புகார் அ.த.க. பாடசாலை மற்றும் ஸ்ரீபாரதி பாடசாலை ஆகியவற்றின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினர்களான அ.ரவீந்திரதாஸன், கணேஷ் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் இப்பாடசாலை மாணவர்களுக்கு கற்றலுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டு கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. (136,எஸ்)

## மத்தியஸ்தர் சபை நாளை கூடுகிறது

சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையினால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த செயற்பாடுகள் நாளை சனிக்கிழமை நடைபெறும் என மத்தியஸ்தர் சபைத் தலைவர் ப.நடராஜா அறிவித்துள்ளார். (11)

## மின்தடை இல்லை

மின்சாரசபையால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி நாளை சனிககிழமை இடம்பெறுவதாக இருந்த மின்தடை எந்தவொரு இடத்திலும் அமுல் படுத்தப்பட மாட்டாது என்று மின் சாரசபை அறிவித்துள்ளது.


# அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(தீவகம்)

தீவகக் கல்வி வலயத்தில் யா/ எழுவைதீவு றோ.க.த.க. பாடசாலையில் அதிபர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இப்பதவிக்குத் தீவகக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, தரம் 2-1, இனைச் சேர்ந்த தீவகக் கல்வி வலய ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளபடும்.

விண்ணப்பப் படிவங்களைத் தீவகக் கல்வி வலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்ப முடிவுத் திகதி 27.01.2012 என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



சுதேசிய தியானயோக சபையான செபமாலைத்தாசர் சபையைச் சேர்ந்த நான்கு அருட்சகோதர்களுக்கு யாழ். ஆயரால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டு கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டபோது. (52)

## கூட்டம்

(சாவகச்சேரி)

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (11)

## ஆன்மீக உரை

(வடமராட்சி)

செல்வச்சன்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சன்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையால் நடாத்தப்படும் ஆன்மீக நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை ஆலய பூசை முடிவுற்றதும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பக்தியின் வலையில் பாடுவேன் என்னும் விடயம் பற்றி யாழ். சின்மய நிறுவனத்தின் பிரமச்சாரி யாக்கிரத சைதன்ய உரையாற்றவுள்ளார். (116)

## கலந்துரையாடல்


(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் பதிவு செய்யப்பட்ட கழகங்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார்.

# பட்டாசு விற்பனை வர்த்தகருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)



கோண்டாவில் பகுதியில் அனுமதியின்றி பட்டாசு விற்பனை செய்த நபருக்கு யாழ். நீதிமன்றத்தால் இரண்டாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸாரினால் குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் குறித்த நபர் கைது செய்து யாழ். நீதவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி மா.கணேசராசா குற்றவாளிக்கு இரண்டாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (எஸ்)




## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



எட்டாவது அகவையில்

பெயர் : கலாதரன் மிதுசா,
முகவரி: மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.




பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1186)


# யாழ்ப்பாணம் மாநகர சபை ஆதனவரி அறிவித்தல் - 2012

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி யாழ்ப்பாணம் மாநகர சபை பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளமை இத்தால் அறியத் தரப்படுகின்றது.

01. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம், 247 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நேர்முன் ஆண்டான 2011 ஆம் ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டை அல்லது ஆதன மதிப்பீட்டையே 2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடாக அல்லது ஆதனவரி மதிப்பீடாகக்கொள்ளுதல்.

02. 2012 ஆம் ஆண்டிற்கான வீதவரிப்பணங்கள் யாவும் நான்கு சம கந்தாய தவணைகளில் 2012 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜுன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய திகதிகளன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

03. 2012 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ வருடாந்த வீத வரிகள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு பத்து சதவீதம் (10%) கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வீதவரி வருமதியாக உள்ள அந்தக் கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாயவரி செலுத்தப்பட்டால் ஒரு ஐந்து சதவீதம் (5%) கழிவு அனுமதிக்கப்படும்.

04. மேற்கூறப்பட்ட பந்தி 2 இல் குறிப்பிடப்பட்ட உரிய திகதிகளுக்கு முன்பு குறித்த வீத வரிகளைச் செலுத்தாதவிடத்து வெறும் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது பதினைந்து சதவீதத்திலும் (15%) ஏனைய இடங்கள் மீது இருபது சதவீதத்திலுமான (20%) விறாந்துச் செலவு அறவிடப்படும்.

05. மேலும் புதிதாகக் காணி கட்டடங்களைக் கொள்வனவு செய்வோர் அவற்றுக்கான ஆதனப் பெயர் மாற்றங்களை உடன் மேற்கொள்ளுமாறும், புதிய கட்டடங்களைக் கட்டும்போதும், சேதமடைந்த ஆதனங்களைத் திருத்தம் செய்யும்போதும் மாநகர சபையின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்துகின்றேன்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
03.01.2012.

திருமதி.யோகேஸ்வரி பற்குணராசா,
மாநகர முதல்வர், மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(C/1213)

உலகத்தில் உயர்ந்த செயல்கள் அனைத்தையும் சாதித்தவர்கள் உங்களையும், என்னையும் போன்ற மனிதர்களே. வீரம் மட்டும் இருந்தால் நம்மைப் போன்ற மனிதர்கள் எதனையும் செய்து முடிக்க முடியும்.

-சுவாமி விவேகானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

# பழகிய தடத்தில் பயணம்!

தன் தோல்வியிலிருந்து எதையும் கற்றுக்கொள்ள மறுக்கும் சமூகம் முன்னோக்கி நகராது என்பது உண்மை. இந்த உண்மையையும் விளங்காதது போல நடித்துக் கொண்டிருக்கும் சமூகத்தின் மனநிலை என்பது நிச்சயம் தீவிர கவலைக்குரியதுதான்.

புலிகளின் வீழ்ச்சிக்கான அல்லது கணிசமான தமிழர்களது நம்பிக்கை அதிர்ச்சிகரமாய் முடிந்ததுக்கான காரணங்களாக இந்தியாவையும் சர்வதேசத்தையுமே குற்றம் கண்டு ஒருபாட்டம் திட்டிவிட்டு, அவர்களிடமே, இலங்கையரசு பிரச்சினையைத் தீர்க்காது பாருங்கள் பாருங்கள் என்று முறையிட்டுக் கொண்டிருக்கும் அழுகுணி ஆட்டத்தையே தமிழ் அரசியலாகத் தொடரும் போக்கு வேறெதைச் சொல்கிறது?

ஆனால் இப்போது தோல்வியின் காரணங்களை ஆய்வுரீதியாக அலசும் கருத்துக்கள் ஆங்காங்கே எழுவது மகிழ்ச்சிக்குரியது. தமது வீழ்ச்சிக்கான கருப்பையைப் புலிகள் தங்களிடமே கொண்டிருந்தார்கள் என்பதும், இந்தியா சர்வதேசம் பற்றியெல்லாம் நம் சமூகத்துக்குப் போதுமான நெகிழ்ச்சியோ புரிதலோ இருந்திருக்கவில்லை என்பதும், தன்னை நோக்கத் தெரியாத சமூகமாக இருந்திருக்கிறோம் என்பதும், நமது நலன்களிலேயே உறுதியாய் இருந்து கொண்டு மற்றவர்களை எங்களுக்காகக் கீழிறங்குமாறு வாதிடுபவர்களாக இருப்பது பற்றியெல்லாம் மெல்ல மெல்ல நம் சமூகக் குணங்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் கட்டுரைகள் வரத் தொடங்கியுள்ளன. இன்றைய சூழலில் இவ்வாறான ஆய்வுகளே நம் அரசியலை முன்னோக்கி நகர்த்த உதவும்.

தன்னிடமுள்ள குறைகளைப் பார்க்கத் தெரியாத சமூகம் தொடர்ந்தும் அதே பழைய தவறான பாதையிலேயே நடந்து கொண்டிருக்கும். இதற்கு உதாரண விளக்கமாகவே தமிழரசுக் கட்சியின் இன்றைய நடவடிக்கைகளும் தென்படுகின்றன. விடுதலைப் புலிகள் எந்தக் கருப்பையிலிருந்து வந்தவர்கள் என்பதையும் உணர்த்துவதாயுள்ளது. புலிகளை இவர்கள் அடிமனதால் வெறுத்திருந்தாலும் கூட, புலிகள் அழியும்போது மௌனமாய் விருப்பமாய்ப் பார்த்திருந்தார்கள் என்பதே உண்மையானாலும் கூட, குணாம்சரீதியாக வேறுபட முடியாதவர்கள் இருவரும் என்பதில் சந்தேகமில்லை.

கூட்டமைப்பை ஏகப்பிரதிநிதிகளாக்கும் முயற்சியும் குறுகி இப்போது தமிழரசுக் கட்சிதான் ஏகப்பிரதிநிதியாக வேண்டும் என்பதில் வந்துநிற்கிறது. பல கட்சிகள் இணைந்த கூட்டமைப்பாக கட்சி பதிவு செய்வதைக் கூட சகித்துக் கொள்ளத் தயாராக இல்லை தமிழரசுக் கட்சி. அதற்கெதிரான முயற்சிகளில் தீவிரமாக இறங்கி, அலுவலகங்களைத் திறக்கிறது, உறுப்பினர்களைச் சேர்க்கிறது. ஆளுக்கொரு மஞ்சள் பையுடன் இறங்கி நடக்கிறது ஏகப்பிரதிநிதித்துவ வேட்டை! ஆயுதங்களைக் காட்டி ஆட்களை ஏற்றிச் செல்லவில்லை என்பது மட்டுமே அகிம்சாமூர்த்திகளின் தனித்துவம்!

தமிழரசுக் கட்சிக்கு வெளியே இருந்து வந்து எம்பிக்களான பத்திராதிபர் சரவணபவனும் இணையத்தள அதிபர் சிறீதரனும் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்களாக விழுங்கப்பட்டுவிட்டார்கள். கத்தியின்றி ரத்தமின்றி ரெலோவையும் விழுங்கிவிடப் போவதாகத் தமிழரசுக் கட்சி வட்டாரத்திலிருந்தே தகவல் கசிகிறது. ரெலோ எம்பிக்கள் முதலில் கட்சிச் செயலாளரை அனுப்பிவைத்திருப்பதாகவும், "எம்பி சேவை"யை உத்தேசித்து தேர்தலுக்கிடையில் ஏகப்பிரதிநிதித்துவ ஜோதியில் கலந்துவிடுவார்களென்றும் தெரிகிறது.

தனது இனத்துக்குள்ளேயே பல்வேறு கட்சிகளின் இருப்பைச் சகித்துக் கொண்டு, அங்கீகரித்துக் கொண்டு அரசியல் செய்யும் நாகரிகத்தை இன்னும் தமிழ்ரத்தம் உணர்ந்துகொண்டது போலவோ ஒத்துக்கொள்ளும் போலவோ தெரியவில்லை. இப்படியிருக்கையில், எப்படி மற்றைய இனங்களின் கட்சிகளோடு கூட்டுச் சேர்வது, எப்படி மற்றைய இன மக்களைச் சகிப்பது, உரையாடுவது, பன்மைத்துவத்தை ஏற்பது, அதன்மூலம் இந்தத் தீவிற்குள் வசிக்கும் அனைவரும் இணங்கி வாழக்கூடிய ஒரு தீர்வு நோக்கி நகர்வது?

குண்டுச்சட்டிக்குள் குதிரையை ஓட்டியபடியே நமது மக்களை எங்கு கொண்டுபோய்ச் சேர்ப்பது? திரும்பத் திரும்ப ஏகப்பிரதிநிதித்துவ முள்ளிவாய்க்கால் பயணம்தானா?

– ஆசிரியர்

# சுனாமியில் காணாமற்போன சிறுமியை 7 வருடங்களின் பின் உரிமை கோரும் பெற்றோர்

(கொழும்பு)

சுனாமியில் காணாமல் போன ஒரு சிறுமியை ஏழு வருடங்களின் பின்னர் இரு பெற்றோர் உரிமை கோரும் விசித்திர சம்பவம் கல்முனையில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமியின்போது காணாமற்போன தனது மகள் உயிரோடு இருப்பதாக பெற்றோர் கூறுகின்றனர்.

இந்நிலையில், கல்முனையில் வசித்துவரும் அவரை தம்மிடம் ஒப்படைக்கவேண்டும் என அவர்கள் வாதிடுகின்றனர். எனினும், அதனை மறுக்கும் மறுபகுதியினர் அவர் தங்கள் பிள்ளை என வாதிட்டு வருகின்றனர். இந்தவிதமான வாதாட்டங்களுக்கு மத்தியில் இவ்விவகாரம் பொலிஸார் வசம் சென்றுள்ளது.

பெரும் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் இவ்விடயம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின்போது சிறுமி ஒருத்தி காணாமல் போயுள்ளார். இந்நிலையில் ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் சம்மாந்துறை பிரதேசத்தில் அவர் உயிருடன் இருப்பதாக தகவல் கிட்டியுள்ளது.

கல்முனை இஸ்லாமாபாத் பிரதேசத்தைச் சேர்ந்த சீனு முகமது பாத்திமா இர்பாலா என்ற சிறுமியே தனது ஒன்பதாவது வயதில் சுனாமியினால் பாதிக்கப்பட்டு காணாமற் போயுள்ளார்.

பெற்றோர் தேடியும் அவர் கிடைக்காத காரணத்தினால் குறித்த சிறுமி உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டு மரண அத்தாட்சி பத்திரம் பெறப்பட்டுள்ளது.

எனினும் பெற்றோருக்கு கிடைத்த தகவல்களை அடுத்து அவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை சிறுமியைத் தேடி சம்மாந்துறை பிரதேசத்துக்கு வந்துள்ளனர்.

அங்கு வேறு ஒரு பெயரில் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் சிறுமி இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து பெற்றோர் அங்கு சென்றுள்ளனர். எனினும் சிறுமி தங்கள் பிள்ளை எனவும் எக்காரணம் கொண்டும் அவரை ஒப்படைக்க முடியாது என எடுத்துக்கூறியுள்ளனர்.

இச்சந்தர்ப்பத்திலேயே சிறுமியை உரிமை கோரும் பெற்றோர் பொலிஸாரின் உதவியை நாடியுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முல்லைத்தீவு பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் இணைப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டில் 81 மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 67 பேர் மீண்டும் பாடசாலையில் இணைத்துக்கொள்ளப்பட்டதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எஞ்சியுள்ள 14 பேரும் 16 வயதிற்கு மேற்பட்டவர்களாக் காணப்படுவதால் இவர்களை முல்லைத தீவு தொழில்நுட்பக் கல்லூரியில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கையை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் மேற்கொண்டு வருவதாகவும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலக அதிகாரிகள் கிராமங்கள் தோறும் சென்று பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களை கண்டறிந்து அவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தவகையில் இந்த மாதம் சிலாவத்தை தியோநகர், தீர்த்தக்கரை ஆகிய பகுதிகளுக்கு சென்ற தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலக அதிகாரிகள், பாடசாலையிலிருந்து இடைவிலகிய 40 மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2011ஆம் ஆண்டில் 15 சிறுவர் பாலியல் துஷ்பிரயோகச் சம்பங்களே இடம்பெற்றுள்ளதாகவும் 2010 ஆம் ஆண்டை விட இது சற்று குறைவடைந்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.

# வயல் நிலங்களை நாசமாக்கும் கட்டாக்காலி கால்நடைகள்

(மண்டைதீவு)

மண்டைதீவு நெல்வயல்களில் தெற்கேயுள்ள கம்பன் புலம வயல் வெளியை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இந்த வருடம் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடநத வருடம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளபபட்ட 60 ஏக்கர் வரையான வயல்நிலங்களை தவிர்ந்த புதிதாக விதைக்கப்பட்ட நிலங்களில் களைகள் நெருக்கமாக வளர்ந்துள்ளதால் விளைச்சல் பாதிக்கபபடும் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த வயல் நிலங்களில் கோரைப்புல் அதிகமாக காணப்படுவதுடன் கதிர்கள் வெளிவருவதற்கு முன்னதாக களைகள் அகற்றப்படவேண்டியது அவசியமானதென தெரிவக்கப்படுகிறது.

இதேவேளை கம்பி வேலிகளை சேதப்படுத்தும் கட்டாக்காலி மாடுகளின் அடாவடித்தனத்தால் சாந்தாவாரி, ஆலிகாடு போன்ற பகுதி வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வெங்காயம் மற்றும் புகையிலைத் தோட்டங்களையும் நாசமாக்கிவருகின்றன.

ஆடுகளை வளர்க்கும் கமக்காரர்கள் அவற்றை கட்டிவள்ர்ககுமாறு வேலணை கமநல பெரும்பாக உத்தியோகத்தர் ஏற்கனவே அறிவுறுத்தி இருந்தார்

இந்ந நிலையில் கட்டாக்காலி மாடுகளை பிடிப்பதற்கு ஆட்களை நியமிக்குமாறு விவசாயிகள் வேலணை பிரதேசசபை மற்றும் பிரதேச செயலகங்களை கோரியுள்ளனர். (23)

## பொங்கல் நிகழ்வுகள்

யாழ். மாவட்ட செயலக நலன புரிக் கழகத்தின் தைப்பொங்கல் நிகழவு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

♦♦♦

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பொங்கல் நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவாகள் கலந்து கொள்ளவுள்ளனர். (எஸ்)

# திருவையாறு மகா வித்தியாலயம் சிறந்த பாடசாலையாகத் தெரிவு

(முழங்காவில்)

பாடசாலை மட்டத்திலான தகவு திறன்களின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் திருவையாறு மகா வித்தியாலயம் சிறந்த பாடசாலையாக ஜனாதிபதி செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேதகு ஜனாதிபதியினது பிறந்த நாளை முன்னிட்டு ஜனாதிபதி செயலகத்தினால் ஆறு இலட்சம் பெறுமதியான கணினி உபகரணங்கள், நூலகப் புத்தகங்கள் என்பன அன்பளிப்புச் செய்யப்பட்டதுடன், மேதகு ஜனாதிபதியால் பாராட்டும் வழங்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலை மாணவர்கள் மாகாண மட்டத்தில், தேசிய மட்டத்தில் பல சாதனைகளை நிலைநாட்டியமையால் அன்பளிப்புக்களும், பாராட்டுக்களையும் பெறக்கூடியதாக இருந்தது எனவும் பாடசாலைச் சமூகம் தெரிவித்ததோடு, பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு தமது பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர். (112)

# பெண்கள் தலைமைத்துவம் தாங்கும் குடும்பங்களை முன்னேற்ற நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் பயிர்ச் செய்கை நிலங்களை நாசமாக்கும் கட்டாக்காலிகள் பிடிக்கப்பட்டு உரிமை கோரப் படாத இடத்து அவை பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும். அதனூடாக அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படையச் செய்ய முடியும் என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போது தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றுகையில்,

தனங்கிளப்புப் பகுதியில் 7 கிலோமீற்றர் உவர் நீர்த் தடுப்பணை அமைத்தல், மீள்குடியேற்றம் செய்யப்பட்ட எழுதுமட்டுவாள் தெற்கு, ஒட்டுவெளி பகுதிகளில் இராணுவத்தால் அமைக்கப்பட்ட மண் அணையை அகற்றுதல், மறவன்புலோ பகுதியில் 400 ஏக்கர் அளவில் சிறுதானியப் பயிர்ச் செய்கை நிலங்களைச் சுற்றி முட்கம்பி வேலிகள அமைத்தல் போன்ற திட்டங்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ், ஐ.ஓ.எம். நிறுவனத்தினூடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி சா.அஞ்சலிதேவி, ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளரும், சாவகச்சேரி நகரசபை எதிர்க்கட்சித் தலைவருமான சூ.அலெக்சாண்டர், ஐ.ஓம்.எம் நிறுவன பிரதிநிதி உதயகுமார், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரகுநாதன், சாவகச்சேரி நகர சபை செயலாளர் புத்திரசிகாமணி, சாவகச்சேரி நகரசபை, பிரதேச சபை தவிசாளர்கள் மற்றும் விவசாயத் துறைசார் அதிகாரிகள், பொதுமக்கள் எனப பலர் கலந்துகொண்டனர்.

# வடமராட்சி கிழக்கில் வங்கிச் சேவை ஏற்படுத்தித்தர மக்கள் கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து ஒரு வருடம் முடிவடைந்த நிலையில் இப்பிரதேச மக்கள், தாம் வங்கிச் சேவைகளைப் பெறுவதற்கு பருத்தித்துறை, சாவகச்சேரி, பரந்தன், கிளிநொச்சி ஆகிய இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாகவும், இதனால் வீணான நேரவிரயமும், பண விரயமும் ஏற்படுகின்றது என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேச மக்கள் மீள்குடியமர முன்னரும், மீளக்குடியமர்ந்த பின்னரும் இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளில் கடற்றொழில், விவசாயத் தொழில் முயற்சிக் கடன்களைப் பெற்றிருந்தனர்.

இப்பொழுதும் கூட பெரும் தொகையான மக்கள் தொழில் முயற்சிக் கடன்களைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர். கடன்கள் பெற்றவர்கள் மாதாந்த தவணைப் பணத்தை வங்கிகளில் செலுத்துவதற்கும் கடன் பெற விண்ணப்பித்தவர்கள் பிணையாளிகளுடன் மேற் குறிப்பிட்ட இடங்களுக்கு வங்கிச் சேவைகைளப் பெறுவதற்கும் வெகு சிரமமத்தின் மத்தியிலேயே சென்றுவர வேண்டிய நிலையில் உள்ளனர்.

ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் வீட்டுத்திட்டப் பகுதிக் கொடுப்பனவுகளைப் பெறுவோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ஆகவே இப்பிரதேச மக்களின் நலன்கருதி இலங்கை வங்கி, மக்கள் வங்கிக் கிளைகளை இப்பிரதேசத்தில் அமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (70)

# பொங்கல் திருவிழாவை முன்னிட்டு மாநகர சபை நடத்திய போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணத் திருவிழா பொங்கல் - 2012" நிகழ்வை முன்னிட்டு யாழ்.மாநகர சபையின் விழா ஏற்பாட்டுக் குழுவினால் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு-

**பேச்சு**

எ.ஜெனாத் (பத்திரிசியார் கல்லூரி, லோ.கமில்டன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), நா.சுஜீவன் (மீசாலை வீரசிங்கம் ம.வி), செ.ஆன்டனியா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி).

**கட்டுரை**

ந.துஷாந்தி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ந.ராகினி (காலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), சி.சோபிதா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**கவிதை**

ஷறோன் (பத்திரிசியார் கல்லூரி), பொ.கஜவதனி (மகாஜனக் கல்லூரி), செ.கீர்த்திகா (சங்கானை சிவப்பிரகாச ம.வி).

**நடனம் - கீழ்ப்பிரிவு**

வசந்தகுமார் ஜவா[illegible]கர் (அரியாலை), கிருபாகரன் தனபைரவி (உடுப் பிட்டி).

**மத்திய பிரிவு**

அபிராமி நம்பியாரூபன் (கொக்குவில்), தங்கவேல் கோபிகா (கோண்டாவில மேற்கு), நடேசு ஜெயபானுசன் (இருபாலை),

**மேற்பிரிவு**

க.பவன் (இணுவில்), ஜெ.நர்மதா (உரும்பிராய்), து.சுசீதா (தொண்டைமானாறு), கை.துஸேந்தினி (தும்பளை, பருத்தித் துறை).

**பாடல் - கீழ்ப்பிரிவு**

ஆல்டின் டாரஸ் (குருநகர்).

**மத்திய பிரிவு**

கெனடி பிறின்ஸ்ரன் (பத்திரிசியார் கல்லூரி), த.மரியதர்சன் (பத்திரிசியார் கல்லூரி).

**மேற்பிரிவு**

தெ.சந்திரகுமார் (மானிப்பாய்), கதிரவேலு யோகேஸ்வரன் (நெடுந்தீவு கிழக்கு), மேகலா சின்னத்தம்பி (ஆனைக்கோட்டை).

## புதிய நிர்வாக சபை தெரிவு

(கோப்பாய்)

உரும்பிராய்-செல்வபுரம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

உரும்பிராய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் பூ.கண்ணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மா.கெங்காதரன் தலைவராகவும், யோ.நகீர் உபதலைவராகவும், செ.அகிலகுமாரன் செயலாளராகவும், செ.செந்தூரன் உபசெயலாளராகவும், இ.சிவனேஸ்வரன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் 8 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (08)

# இரத்த மாற்றீடு செய்வதற்கான பாதுகாப்பான இடம் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இயங்கி வரும் இரத்த வங்கியிலிருந்து விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களுக்கு குருதியை எடுத்துச் செல்வதற்கான ஏற்ற பாதுகாப்பான இடம் அமைத்துத் தருவதாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாள் பவானி பசுபதிராஜா உறுதியளித்துள்ளார்.

இரத்த வங்கிக் கட்டடத்தின் பின்புறமாகவே பிரத்தியேகமாக யன்னல் போன்று அமைக்கப்பட்ட பகுதியினூடாகவே குருதிப் பைக்கற்றுக்கள் வைத்தியசாலை ஊழியர்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன.

குறித்த பகுதியில் கழிவு வாய்க்கால்கள் காணப்படுகின்றது. அதேபகுதியில் கண் நோயாளர்கள் விடுதிக்கான மலசல கூடம் அமைந்துள்ளது. இதனால் துர்நாற்றத்தின் மத்தியிலும் குருதியை எடுத்துச் செலல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஊழியர்களினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனவே குருதியை எடுத்துச் செல்வதற்கான மாற்று ஏற்பாடு செய்து தருமாறு ஊழியர்கள் வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்ததை அடுத்து பணிப்பாளர் தொழிற் சங்கத்தினர் ஊடாக குறித்த பகுதியைப் பார்வையிட்டு அதற்கான பிரத்தியேகமான கொட்டகை அமைத்துத் தருவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். (எஸ்)

## யாழ்.நகரப் பகுதியில்

# போக்குவரத்துக்கு இடையூறாகும் பெயர்ப் பலகைகள் அகற்றப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதிகளில் கடந்த 3 தினங்களாகப் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த கடைகளின் வர்த்தகப் பெயர்ப் பலகைகள் பல எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.நகர்ப் பகுதி மற்றும் உள்ளகப் பிரதான வீதிகளான கஸ்தூரியார் வீதி, விக்டோரியா வீதி, கே.கே.எஸ்.வீதிகளில் உள்ள வர்த்தகக் கடைகளின் முன்னால் உள்ள பெயர்ப் பலகைகளே இவ்வாறு மீட்டு பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

நகைக் கடைகள், பான்சி கடைகள், பலசரக்குக்கடைகள், உடுப்புகடைகளில் முன்னால் உள்ள குறித்த பெயர்ப் பலகைகள் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்து வந்தன.

தற்போது பண்டிகைக் காலமாகையால் மேற்குறித்த கடைகளுக்கு முன்னால் அதிகமாக பெயர் பலகைகள் வைக்கப்பட்டு வியாபாரம் மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும் வீதிப்போக்குவரத்து விபத்துக்கள் அண்மைக்காலமாக இவ்விளம்பரங்களினால் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து யாழ்.பொலிஸாரினால் இப் பெயர்ப் பலகைகள் அகற்றப் பட்டு வருகின்றன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பெயர்ப் பலகைகள் பொலிஸ் நிலையத்தில் தேங்கிக் கிடப்பதுடன் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (எப், எஸ்)

# கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் புதிதாக இணைந்துள்ள தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் நிகழ்வான 'கால்கோள் விழா' எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற கல்லூரியின் பிரதி அதிபர் ஐ.சிவராஜா, சிறப்பு விருந்தினராக பிரம்மஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.





இருபாலை தெற்கு ஆனந்தபும் கலைவாணி சனசமூக நிலையத்தின் நூலகத் திறப்பு விழா நிகழ்வில் வலி.கிழக்கு.கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் உத்தியோகத்தர்கள் நிற்பதையும், கலைவாணி முன்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்வையும் காணலாம். (08)

# சவால்களையும் விமர்சனங்களையும் எதிர்கொண்டு மக்களுக்கான சேவையை வழங்க வேண்டும்

## யாழ். மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி




(யாழ்ப்பாணம்)

எனது சேவைக்காலத்தில் சாவகச்சேரி நீதிமன்ற கட்டடப்பணிகள் மிக விரைவாக நடைபெற்று நிறைவுறும் தறுவாயில் உள்ளது. அத்துடன் நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு, சட்ட உதவி ஆணைக்குழு, சமுதாயச்சீர்திருத்தப்பிரிவு அகியன நிறுவப்பட்டமைதென்மராட்சி மக்களுக்கு பேருதவியாக அமையும் என நம்புகிறேன் இவ்வாறு யாழ். மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராசா தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற தமககான பிரியாவிடை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நீதிபதி என்ற வகையில் புகழ்ச்சி இகழ்ச்சி, இன்பம், துன்பம் ஆகியவற்றுக்கு அடிபணியாமல் சவால்களையும், விமர்சனங்களையும் எதிர்கொண்டு மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்பது எனது பேரவா ஆகும். தனக்கு கீழ் வேலை செய்கின்ற உத்தியோகத்தர்களின் நலன்களிலும்,முன்னேற்றத்திலும் ஒரு தலைமை நிர்வாகி கவனமாக ஈடுபாட்டுடன் இருந்தால்அந்த நிர்வாகம் சிறந்த நிர்வாகமாக இருக்கும். ஊழியர்களும் மன மகிழ்ச்சியுடன் பணி புரிந்து நிர்வாகத்துக்கு நல்ல பெயர் எடுதத்துக்கொடுப்பார்கள்.

கண்டிப்பு இருந்தாலும், அன்பே எனது ஆயுதமாக எல்லா நிலைகளிலும் இருந்துவந்தது. நடுநிலையோடு தீர்ப்புகள் வழங்குகின்ற போது நான் யார் மீதும் வெறுப்போ, விருப்போ காட்டுவது இல்லை. நீதிபதியின் மனோநிலை அப்படித்தான் இருக்கவேண்டும்.

எனது சேவைக் காலத்தில் என்னால் சிறந்த முறையில் பணியாற்ற முடிந்தமைக்கு ஊழியர்களின் ஒத்துழைப்பு மிக முக்கியமான காரணமாகும். அந்த வகையில் நீதவான் நீதிமன்ற பதிவாளர்கள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அனைவருக்கும். இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறுவதுடன் இறைவனுக்கும் நன்றி கூறுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.



க.பொ.த (உ/த) பரீட்சையில் கணிதப்பிரிவில் அகில இலங்கையில் முதலாம் இடத்தைப் பெற்ற உடுப்பிட்டி அமெரிக்க மிசன் பாடசாலை மாணவன் க.கமலவாசனுக்கு மக்கள் வங்கி யாழ். பிராந்திய கிளையினால் ஒரு இலட்சம் ரூபா காசோலை வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் சி.பத்மநாதன் மாணவனுக்கு காசோலையை கையளிப்பதையும் அருகில் வல்வெட்டித்துறைக்கிளை முகாமையாளர் பாட சாலை அதிபர் மற்றும் பெற்றோர் நிற்பதைக் காணலாம்.

# பருத்தித்துறை பிரதேச சபையின் மாணவர் கௌரவிப்பு விழா

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை பிரதேச சபையினால் நடாத்தப்பட்ட மாணவர் கௌரவிப்பு விழா அண்மையில் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ. சஞ்சீவன் தலைமையில் வடமராட்சி கிழக்கு பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற முன்னாள் பிரதேச சபைச் செயலாளர் (பருத்தித்துறை) அ.அ.நடராசா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன். வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் த. கணேசமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருநதினர்களாகவும் கலந்து கொண்டனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 13 மாணவர்களுக்கு அன்பு தளிர்கள் அமைப்பின் நிதி அன்பளிப்பு மூலம் ஒவ்வொருவருக்கும் ரூபா ஐயாயிரம் வீதம் வங்கியில் வைப்பிலிடப்பட்டதுடன் ஒவ்வொருவருக்கும் புத்தகப்பைகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் இப்பிரதேசத்தில் தாய் தந்தையரை இழந்து ஊனமுற்ற 50 மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் நாலாயிரம் ரூபா பண உதவியும் விருந்தினர்களால் வழங்கப்பட்டது.(70)

# சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜெயந்தி விழா

((யாழ்ப்பாணம்)

மருதனார்மடத்தில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் ஏற்பாட்டில் சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜெயந்திவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளஇவ்விழாவில் சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள் வாசிப்பு, சுவாமிஜியின் வழியில் புதுயுகம் காண்போம் என்னும் பொருளில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவனின் உரை மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் உரை என்பன இடம்பெறவுள்ளன. தொடர்ந்து சுவாமி விவேகானந்தரின் ஜெயந்திப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கல், பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கல் என்பனவும் இடம் பெறவுள்ளன.

# போதனாவைத்தியசாலையின் தேவைகள்; கனேடிய தூதுக்குழு கலந்துரையாடல்

((யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்த கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் சுங்சென் லெங் குழுவினர் யாழ். போதனாவைத்தியசாலை பணிப்பாளர் பவானி பசுபதிராஜாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இக்கலந்துரையாடலின் போது கனடா நாடாளுமன்ற குடிவரவு மற்றும் கலாசார செயலாளர் சுங்சென் லெங் யாழ். போதனாவைத்தியசாலைக்கு எந்த வகையில் உதவி செய்யவேண்டுமென்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இக் கேள்விக்கு பதிலளித்த யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் பவானி பசுபதி ராஜா, தற்போது அவசியமானதொன்றாக இருதய நோய் சிகிச்சைப்பிரிவு தேவைப்படுகின்றது. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் இருதய நோயினால் பல பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இருதய சத்திர சிகிச்சைக்கான மாற்றுவசதிகள் இன்றி கொழும்பிற்கு நோயாளர்களை அழைத்துச்செல்லப்படுவதாகவும் யாழ். போதனா வைத்தியசாலையில் இருதய நோய் பிரிவு அமைக்கப்பட்டால் பல இருதய நோயாளிகள் பயன்பெறுவார்கள் என்றும் இதன்போது தெரிவித்தார்.

பணிப்பாளரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சுங்சென் லெங் இதுதொடர்பாக கனடா நாடாளுமன்றில் கலந்தாலோசித்து அதற்கான ஏற்பாடுகளை செய்வதாக உறுதியளித்தார்.

இக்குழுவில் கனடா நாடாமன்ற உறுப்பினர் ஜோய் டானியல், பிரதி உதவியாளர் டோனி பிலிப்ஸ், விசேட உதவியாளர் மார்பினி கால்ஜொட், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (எஸ்)

# முரசின் இன்றைய பலன்

(13.01.2012 –வெள்ளிக்கிழமை)

கர வருஷம் மார்கழி 28 ஆம் திகதி சதுர்த்தி
பிற்பகல் 10.23 வரை. நட்சத்திரம் பூரம் பின்இரவு 4.11 வரை.சித்தயோகம்.
இராகுகாலம் 11.03 - 12.33 வரை. சுபநேரம் 6.33 - 08.03 மணிவரை.
எமகண்டம் 3.33 - 5.03வரை, குளிகைகாலம் 8.03 - 9.33 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் :- | பக்தி குறைவு, ஜெயம், நிதானம், முன் எச்சரிக்கை. |
| ரிஷபம:- | தேர்ச்சி, கவலை, பங்காளிகளால் தொல்லை, பந்தயத்தில் வெற்றி. |
| மிதுனம் :- | புகழ்ச்சி, உழைப்பு, மருத்துவச் செலவு, அலைச்சல், |
| கடகம் :- | குழப்பம், ஊக்கம், பிரயாணம், அன்னிய இனத்தவர் மூலம் உதவி. |
| சிம்மம் :- | மறதி, பேராசை. பொருட்கள் சேரும், வாழ்க்கையில் முன்னேற்றம். |
| கன்னி :- | புதிய நன்மை, சோதனை, வெற்றிகள் உண்டு, பிரச்சினைகள் தீரும். |
| துலாம் :- | ஸ்திரிகளால் நன்மை, சொத்தில் சிக்கல், நிதானம் நன்று, தடைதாமதம். |
| விருச்சிகம்- | வாக்குநலம், காரியானுகூலம், ஆரோக்கியம், பண வசதி. |
| தனுசு :- | இலாபம், உடல் உபாதை, வழக்குகளில் வெற்றி, பதவி உயர்வு. |
| மகரம் :- | கவனம் தேவை, தொழில்வளம், பிரச்சினைகள் தீரும், சொத்துக்களால் செலவு. |
| கும்பம் :- | வாக்கு பலிதம், நினைத்தகாரியம் வெற்றி, அதிர்ஷ்டம், ஆசைகள் நிறைவேறும். |
| மீனம் :- | வீண்பயம், சுப காரியங்கள், வேலைப்பளு அதிகம், பிரச்சினைகள் அகலும். |

# கோப்பாய் பிரதேச மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

(கோப்பாய்)

வலிகிழக்கு கோப்பாய்ப் பிரதேச மக்கள் சபைக் கூட்டம் மக்கள் சபைத் தலைவர் இ.ஐங்கரன் தலைமையில் கோப்பாயில் உள்ள அவரது அலுவலகத்தில் கடந்த திங்கள் மாலை 4 மணிக்கு இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் உறுப்பினர்களால் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

முதலில் கல்வித்துறைசார்ந்த பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. கோப்பாய், உரும்பிராய்ப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலைகளில் பாடசாலை அனுமதிகளின் போது பெற்றோரிடம் 3000 ரூபா பணம் அறவிடப்படுவதாகவும், பாடசாலை அனுமதியின் போது பணம் அறவிடக்கூடாது என அறிவித்திருந்தும் இவ்வாறு அறவிடப்படுவதாகவும், இதனால் அன்றாட கூலித் தொழில் செய்பவர்கள் பெருஞ்சிரமப்படுவதாகவும் மக்கள் சபை உறுப்பினர்களால் முறைப்பாடு முன்வைக்கப்பட்டது. இதற்குப்பதிலளித்த யாழ். மாவட்டக் கல்விக் குழுவின் வலிகிழக்கு கோப்பாய் பிரதேசத்தினுடைய பிரதிநிதியும் முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளருமாகிய கே.வி. குணசேகரம் கடந்த காலங்களைவிட இந்த ஆண்டு அனுமதியின் போது பணம் அறவிடுதல் குறைவடைந்துள்ளது. பெற்றோர் இது தொடர்பாக முறைப்பாடு தெரிவித்து ஒத்துழைத்தால் இதனை முற்றாக இல்லாமல் செய்யலாம். பாடசாலைகளின் அபிவிருத்திக்குத் தேவையான பணத்தை அரசாங்கம் வழங்கி வருகின்றது. பெற்றோர்கள் பணம்வழங்கத்தேவையில்லை என்பதை வலியுறுத்திக் கூறினார். இதன்போது மக்கள் சபைத் தலைவர் இ.ஐங்கரன் கருத்து தெரிவிக்கையில், இவ்விடயம் குறித்து மக்கள் சபையினூடாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் அமைச்சருமான கே.என். டக்ளஸ் தேவானந்தாவிற்கு கடிதம் மூலம் அறிவித்து தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவித்தார். (135,116)



# இலங்கை இந்திய மீனவர் – ஒரே தீர்வு

மீனவர் பிரச்சினை என்பது கடலும் கடல் சார்ந்ததுமாகப் பார்க்கப் படாமல், நாடும் நாடுகள் கடந்தது மாகப் பார்க்கப்படுகிறது. எனவேதான் அது தீர்க்க முடியாத சிக்கலாகவும் இருக்கிறது. மொழியால், இனத்தால், நிலப்பரப்பால் வேறுபட்டு இருந்தாலும், இலங்கை மீனவர்களும் தமிழக மீனவர்கள்தான். அவர்களுக்குக் கடல்பற்றிய புரிதல் உண்டு. மீன் பிடித்தொழிலில் உள்ள நுட்பங்கள், கஷ்ட நஷ்டங்கள் குறித்த அறிதல் உண்டு.

கச்சதீவு அந்தோனியார் கோயில் திருவிழாவில் தமிழக மீனவர்களும் இலங்கை மீனவர்களும் கட்டித் தழுவி அன்பு பாராட்டும் காட்சிகளைக் காணலாம். ஆனால், இந்த மீனவர்களின் வாழ்க்கையையே அறியாத இலங்கைக் கடற்படை, இந்தியக் கடலோரக் காவல்படை அதிகாரிகள், இரு நாட்டு அரசுகள்தான் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குகிறார்கள். வட மேற்கு இலங்கைக்கும் கச்சதீவுக்கும் இடைப்பட்ட பூங்கொடித் தீவு, நெடுந்தீவு போன்ற பகுதிகளில்தான் மீன்வளம் அதிகம். தமிழகக் கடல் எல்லைக்குள் நீர்பரப்பு உண்டே தவிர, மீன்வளம் இல்லை. மீன் பிடிக்க வேண்டும் என்றால், கச்சதீவைத் தாண்டுவதைத் தவிர, தமிழக மீனவர்களுக்கு வேறு வழி இல்லை.

கடல் பரப்பை எல்லை போட்டுப் பிரிப்பதைவிட, மீன் வளத்தை எப்படி இரு நாட்டு மீனவர்களும் பங்கிட்டுக்கொள்வது என்பதுதான் முக்கியம். ராமேஸ்வரத்தில் நாட்டுப் படகு மீனவர்களுக்கும் விசைப் படகு மீனவர்களுக்கும் இடையில் எந்தெந்த நாட்களில் மீன் பிடிக்கச் செல்லலாம் என்ற ஒப்பந்தம்' இருக்கிறது. அதைப் போல இலங்கை மீனவர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் இடையில் புரிதலும் ஒப்பந்தமும் ஏற்பட வேண்டியது அவசியம்.

ஆனால், விடுதலைப் புலிகள் இருந்த காலம் வரை, தமிழக மீனவர்களைக் கடற்புலிகளாகவே கருதி தாக்குதல் தொடுத்தது இலங்கை அரசு. இப்போது புலிகள் இல்லாத காலத்திலும் அவர்களுக்குப் புலி அச்சம் போகவில்லை. பிழைப்புக்காக கடலில் பாடெடுத்துச் செல்லும் அப்பாவிகளைக் கண்மூடித்தனமாக தாக்குவதும் சுட்டுத்தள்ளுவதும் எந்தத் தார்மிக நெறிகளிலும் சேர்த்தி இல்லை.

மீன் என்பது எப்போதும் வலையில் வந்து விழாது. இரவில் வலை போட்டுக் கண் அசந்துவிடுவார்கள் மீனவர்கள். காலையில் படகு இந்திய எல்லையைத் தாண்டிவிடும். படகு திசைமாறிப் போவது என்பது காற்று, தட்ப வெப்ப நிலை, நீரோட்டங்கள் எல்லாவற்றையும் பொறுத்தது. இதை எல்லாம் புரிந்துகொள்ள வேண்டும் என்றால், ஒருவர் மீனவர் வாழ்க்கைபற்றிப் புரிந்தவராக இருக்க வேண்டும் என்பதைத் தான் மீண்டும் வலியுறுத்துகிறேன்!

ஆனால், இதையெல்லாம் புரிந்து கொள்ளாதவர்கள் அதிகாரிகளாகவும் அரசியல்வாதிகளாகவும் இருக்கிறார்கள். ஏதோ இலங்கைக் கடற்படை மட்டும்தான் அநியாயம் செய்கிறது என்று இல்லை, இந்தியக் கடற்படை செய்யும் அட்டூழியம் அதைவிட அதிகம். கொலை செய்வது இல்லையே தவிர, மீனவர்களைத் தாக்குவது, மீன்பிடிப் பொருட்களைச் சேதப்படுத்துவது என எல்லா அட்டூழியங்களையும் இந்தியக் கடற்படையும் செய்கிறது. ஒரு தமிழக மீனவருக்கு எப்படி சிங்களம் பேசும் இலங்கைக் கடற்படை அதிகாரி அன்னியரோ, இந்திய கடலோரப் படை அதிகாரியும் அன்னியராகத்தான் இருக்கிறார்.



சமீபத்தில் கச்சதீவைச் சுற்றிலும் என்ணெய் வளங்கள் இருப்பதாகக் கண்டுபிடித்து உள்ளனர். ஏற்கனவே எண்ணெய் அரசியலால் அரபுலகு நாடுகள் என்னென்ன பிரச்சினைகளைச் சந்திக்கின்றன என்பது நமக்குத் தெரியும். கச்சதீவிலும் அப்படி ஒரு ஆதிக்கப் போட்டி வரும். அந்தப் போட்டி எத்தகைய அழிவைக் கொடுக்கப்போகிறதோ தெரியவில்லை. அதற்கு முன், தமிழக மீனவர்கள், இலங்கை மீனவர்கள், இந்திய அரசு, இலங்கை அரசு என நான்கு தரப்பினரும் அமர்ந்து பேசி பரஸ்பர புரிதலுக்கு வருவதுதான் ஒரே தீர்வு!

*- ஜோ.டி.குருஸ் (எழுத்தாளர்)*



# பதவிகளுக்கு உரிய பொறுப்பை ஏற்று பணிசெய்தல்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரச கட்டமைப்பில் பாடசாலை ஒரு முக்கிய அங்கம் வகிக்கின்றது. இதனுடன் எண்ணிக்கையானவர்கள் நேரடியாகவும், ஏனையவர்கள் மறைமுகமாகவும் தொடர்புபட்டவர்களாகவும் இருக்கின்றார்கள்.

பாடசாலைகள் ஆற்றுகின்ற பணி என்பதும் ஏனையவற்றோடு ஒப்பிடும்போது முக்கிய ஒன்றாகும். பல வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்த பாடசாலைச் செயற்பாடுகளில் பல நல்ல விடயங்கள் இடம்பெற்றாலும், ஒரு சில குளறுபடிகள் இருக்கவே செய்கின்றன. இவற்றை வெளி யில் பகிரங்கப்படுத்த அச்சு ஊடகங்கள் பெரியளவில் விரும்புவதில்லை. இன்றைய காலத்தில் இணையச் செய்திகளூடாக ஒருசில விடயங்கள் வெளியில் கொண்டு வரப்பட்டாலும், அடுத்த சில கணமே அவை மூடிமறைக்கப் பட்டு விடுகின்றன.

பாடசாலைகளில் காணப்படுகின்ற பிரச்சினைகளை பத்திரிகையில் எழுதி வெளிக்கொண்டு வருவது நிலைமையை மோசமாக்கும் என அவற்றை வெளியிட வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறார்கள். சில தார்மீகக் காரணங்களால் பத்திரிகையாளர்களும் கல்விச் செயற்பாட்டைக் குழப்பாது விட்டு விடுவோம் என அவற்றில் இருந்து ஒதுங்கிக் கொள்வதும் இன்றுவரை தொடர்கின்றது. ஆனால் ஒரு காலகட்டத்தில் சிறிய தவறுதானே எனக் கண்டு கொள்ளாமல் விடப்பட்ட பல தவறுகள் சாதாரணமாக மாறி சிறிய தவறுகள் விடலாம் என்ற பழக்கமாகி விட்டது.

யாழ்ப்பாணத்தின் சூழ் அமைவு, சமூகக் கட்டமைப்பு, அரசியல் மற்றும் பொருளாதார காரணங்கள் சமூகத்தில் தவறுகள் செய்வதை இலகுவாக அனுமதிக்கின்றது. அல்லது சிறிய தவறுகளை ஏற்றுக் கொள்கின்றது. சில சந்தர்ப்பங்களில் சிறிய தவறுகளுக்காக சத்தம் போடுபவர்களைப் பார்த்து முழுச் சமூகமே பார்த்துச் சிரிக்கின்ற நிலைமையும் உண்டு.

இந்த நிலை சரியா? இவை கேள்வி கேட்கப்பட வேண்டிய விடயமா? இவற்றைக் கேள்வி கேட்பதால் சமூகத்தில் இருந்து அந்நியப்பட்டு விடுவோமா என்று கேள்விகள், ஊழல்கள் சமூக விரோதச் செயல்களுக்கு எதிராக கேள்வி கேட்கின்ற மனப்பான்மையயே இல்லாமல் செய்து விடுகின்றது.

ஆனாலும் சமூகத்தில் குரல் அற்றவர்களுக்காக குரல் கொடுக்க வேண்டிய பாரிய கடமை பத்திரிகைகளுக்கு இருப்பதால், பாடசாலை நிர்வாகம் மற்றும் அதன் செயற்பாடுகள் சார்ந்த சில விடயங்களை வெளிக்கொண்டு வருகின்றோம். இந்தச் செயற்பாடு யாரையும் தனிப்பட்ட ரீதியில் பழிவாங்கவோ அல்லது பாடசாலைச் செயற்பாடுகளைக் குழப்பவோ அல்லது வேறு எந்த இலாப நோக்க மற்று செய்யப்படுகின்றது. சில விடயங்களில் உள்ள தவறுகள் சுட்டிக்காட்டப்படுவதன் நோக்கம் அத்தவறுகள் தொடர்ந்து இடம்பெறாமல் தடுக்கும் முயற்சி ஆகும்.

இன்று ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் அதிகாரிகள் ஒருவர் மீது அடுத்தவர் குற்றஞ்சாட்டுவதில் உள்ள ஆர்வம் அவர்கள் செய்யும் பணியில் காட்டுவதில்லை. எல்லோரும் மனிதர்களாக நடமாடுகின்றார்கள். அதேவேளை, எல்லோரும் உத்தமர்கள் இல்லை என்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இப்போதுள்ள நிலையில் ஒவ்வொருத்தரும் அவர் அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணியைச் சிறப்பாக செய்கின்றார்களா? என்ற கேள்விக்கு விடை இல்லை என்பதே ஆகும். சில விதிவிலக்குகள் இருக்கவே செய்கின்றன.

உடுவில் கோட்டப் பாடசாலைகளில் பணியாற்றும் ஒரு சில சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் குறிப்பிட்ட பாட ஆசிரியர்களை பாடம் சார்ந்து கற்றல் கற்பித்தலை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கி ஆசிரியர்களை வழிகாட்டுவதிலும் பார்க்க, அறிக்கைகள் தயாரித்து மேல் அதிகாரிகளை திருப்திப்படுத்துவதையே வெற்றிகரமாக செய்து வருவதாக ஆசிரியர்கள் குறைப்படுகின்றனர்.

இருக்கும் ஆள் மற்றும் பௌதீக வளங்களை வைத்துக் கொண்டே எல்லாவற்றையும் செய்ய வேண்டியுள்ளது. என்றாலும் பொறுப்பான பதவிகளில் அமர்ந்து அதற்கான சலுகைகளை மட்டும் அனுபவித்துக்கொண்டு, அப்பதவிக்கான பணியை ஆற்றாமல் இருப்பது என்பது எந்த வகையில் நியாயமான செயற்பாடாக அமையும்? ஆசிரியப்பணி புனிதமானது, அதனோடு சார்ந்த தொழில்களும் புனிதமானது. மாணவர்களின் எதிர்காலத்தினை நல்வழிப்படுத்தும் பொறுப்பினை ஏற்றவர் அதனைச் சரிவரச் செய்வதே சமூகத்திற்கு நன்மை பயக்கும்.

- குரு.

# குஞ்சுண்ணியும், காந்தியும்




குஞ்சுண்ணியை
உங்களுக்குத் தெரியும்தானே

எழுதி எழுதியே
எழுத்தாய் போனவர்

குஞ்சுண்ணி
எதைப் பற்றியும் எழுதுவார்
எல்லார் பற்றியும் பேசுவார்
எல்லாமும் விவாதிப்பார்

குஞ்சுண்ணி
ஒருநாள் தேநீர்க் கடைக்கு சென்றார்

தேநீர் அருந்தியபடியே
தினத்தந்தி பேப்பரை
மெதுவாகப் படித்தார்

என்னது காந்தியை சுட்டுட்டாங்களா?
குஞ்சுண்ணிக்கு அதிர்ச்சி
கோபத்தில் பேப்பரை கசக்கி எறிந்தார்
அடக்கடவுளே வடைபோச்சே..

வீட்டுக்கு வந்ததும்
காந்தியைப் பற்றி தேட ஆரம்பித்தார்

காந்தி பிறந்த இடத்துக்கு சென்றார்

சபர்மதி ஆசிரமம் சென்று
காந்தி சிலையை வணங்கினார்

ஹேராம் படத்தை
டிவிடியில் பார்த்தார்

காந்திக்கு குல்லா தைத்து கொடுத்த
சுலைமான் சேட்டிடம் பேட்டி எடுத்தார்

மூச்சுக்கு நூறுமுறை
காந்தி காந்தி என்றார்

மனைவி சாந்தியை கூட
காந்தி என்று விளித்தார்

பூந்தி தட்டை பார்த்தாலும்
காந்தி காந்தியென்று உருகினார்

ஊண் உருகி
உள்ளொளி பெருகி
காந்தியாகவே மாறினார்

காந்தியைப் பற்றி
கவிதை எழுத ஆரம்பித்தார்

காந்தியைப் பற்றி
கட்டுரைகள் எழுதி குவித்தார்

காந்திக் கிராமத்திற்கு
கால்நடையாகவே சென்றார்

காந்திக்கே தெரியாத
பல விஷயங்களை
கண்டுபிடித்து எழுதினார்

காந்தி குளித்தது
காந்தி பல்விளக்கியது
காந்தி கிரிக்கெட் விளையாடியது
இன்னும் பல பல:

குஞ்சுண்ணி
ஒரு சுபயோக சுபதினத்தன்று
தனது எழுத்துகளையெல்லாம்
திரட்டி நூலாக வெளியிட்டார்

ஆயிரம் பிரதிகளில்
காந்தி சிரித்தாலும்
ஆத்ம திருப்தி வரவில்லை
குஞ்சுண்ணிக்கு

ஒரு யோசனை பிறந்தது
ஒரு காந்தி எடுத்தால்
இன்னொரு காந்தி இலவசமென்று
ஆரம்பித்தார்

ஒரு புத்தகம் ஐநூறு ரூபாய்
என்று விற்க ஆரம்பித்தார்
ஐந்து நூறு ரூபாய்
பத்து ஐம்பது ரூபாய்
ஐநூறு பத்து ரூபாய்

குஞ்சுண்ணிக்கு வீடெங்கும்
காந்தி கொள்கைகள்
பத்தாய் நூறாய்
ஐநூறாய் ஆயிரமாய்

குஞ்சுண்ணி
காந்தியை போன்று சிரிக்கிறார்
காந்தியை போன்று உண்கிறார்
காந்தியை போன்று நடக்கிறார்
காந்தியாகவே வாழ்கிறார்

குஞ்சுண்ணி
இப்போது ஒரு முழு காந்தியவாதி....

*- என்.விநாயகமுருகன்.*

# மரங்கள் - காகங்கள்

ஒரு பெரிய அப்பிள் மரம் இருந்தது. ஒரு குழந்தை அந்த மரத்தின் மீது கொஞ்சிக் குலாவி விளையாடி வந்தது. மரம ஆனந்தத்தில் திளைததது. குழந்தை வளர்ந்தது. மரத்துடன் உள்ள அதன் நெருக்கம் குறைந்தது.

சில ஆண்டுகளுக்குப் பின் அந்த மரத்தைக் காண இளம் வயதில் அவன் சென்றான். மரம் ஆனந்தத்தில் குதித்தது.

"என்னோடு விளையாட வா" என அழைத்தது.

"இப்போது எனக்கு நேரமில்லை.. கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது" என்றான் இளைஞன்.

மரம் தன்னிடமிருந்த பழங்களை எல்லாம் அவனுக்குக் கொடுத்தது.

அவன் அதை எடுத்துக் கொண்டு சந்தைக்குப் போனான்.

மரத்தை மீண்டும் தனிமை சூழ்ந்தது.

சில வருடங்களுக்குப் பின் அந்த இளைஞன் மரத்திடம் போனான். மரம் மகிழ்ந்தது. "வா என்னுடன் விளையாடு" என்றது.

"எனக்கு நேரமில்லை. வீடுகட்டப் போகிறேன்" என்றான்.

"சரி என்னுடைய கிளைகளை எல்லாம் வெட்டிக்கொள்" என்றது மரம்.

அவன் வெட்டிச் சென்றான்.

மீண்டும் மரம் தனிமையில் விழுந்தது.

நடுத்தர வயதில் அவன் மீண்டும் வந்தான். மரம் குதூகலித்தது.

"வா என்னுடன் விளையாடு" என்றது.

"இல்லை... எனக்கு ஒரு படகு செய்ய வேண்டும், விளையாட நேரமில்லை" என்றான் அவன்.

"என்னை வெட்டிக் கொள்" என்றது மரம் தாமதிக்காமல்.



மரம் வெட்டப்பட்டது. வேர்களும், கட்டையும் மட்டும் மௌனத்தில் அழுதன.

மீண்டும் வழக்கம் போல தனிமை!

பல வருடங்களுக்குப் பிறகு முதுமையின் பிடியில் அவன் வந்தான். மரம் கண்ணீர் விட்டது. "இப்போது என்னிடம் பழங்கள் இல்லை, கிளைகள் இல்லை, எதுவுமே இல்லை. வேர்கள் மட்டும் தான் இருக்கின்றன. அவையும் காய்ந்து கொண்டிருக்கின்றன. என்னால் விளையாட முடியாது, என்னருகில் அமர்வாயா?" ஏக்கத்துடன் கேட்டது மரம். அவன் அமர்ந்தான்.

மரம் அவன் மீது காட்டிய அன்பு அவனுடைய கண்களில் ஈரமாய் வழிந்தது.

நமது வாழ்க்கையில் "பெற்றோர்" எனும் மரம் இப்படித் தான். மழலைப் பருவத்தில் அவர்களோடு சேர்ந்து விளையாடினோம். பின்னர் அவர்கள் நமக்கு பழங்களைத் தரும் மரமாகிப் போனார்கள். அது நமக்குத் திருப்தியாகவில்லை. அவர்கள் தங்களையே கொஞ்சம் கொஞ்சமாய் தியாகம் செய்தார்கள். பதிலுக்கு அவர்கள் எதிர்பார்த்தது எல்லாம் நமது அன்பை மட்டுமே. நம்முடைய அருகாமையை மட்டுமே. ஆனால் நாம் அவர்களுக்கு அதைக் கூடத் தரத் தயாராய் இல்லை!

எத்துணை பெரிய சுயநலம்? எவ்வளவு பெரிய துயரம்!

பெற்றோரின் அன்பைப் புரிந்து கொள்வதொன்றும் கடினமல்ல. கொஞ்ச நேரம் கண்களை மூடி பெற்றோரின் அன்பையும், அவர்களுடைய தியாகங்களையும் மனதில் அசைபோடுபவர்களுக்குத் தெரியும் அன்பின் ஆழமும், பெற்றோரின் மகத்துவமும்.

எண்பது வயதான தந்தை தனது இளம் வயது மகனுடன் திண்ணையில் அமர்ந்திருந்தார். சற்றுத் தொலைவில் ஒரு காகம் வந்தமர்ந்தது.

"அது என்ன மகனே?" என்று கேட்டார் தந்தை.

"அப்பா, அது காகம்" என்றான் மகன்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு மீண்டும் தந்தை "அது என்ன?" என்றார்.

"அது காகம்" என்றான் மகன்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு மீண்டும் தந்தை "அது என்ன? என்றார்.

மகனுக்கு கொஞ்சம் எரிச்சல். "காகம்!" என்றான்.

நான்காவது முறையாக மீண்டும் தந்தை மகனிடம் "அது என்ன மகனே?" என்று கேட்டார்.

மகனின் கோபம் எல்லை கடந்தது. "காகம்... காகம்... காகம்... வயசாயிட்டால் சும்மா இருக்க வேண்டியதுதானே" என்று கோபத்தில் எரிந்து விழுந்தான்.

தந்தையின் கண்கள் பனித்தன. எதுவும் பேசவில்லை. மெதுவாக எழுந்து உள்ளே போனார். ஒரு பழைய டைரியை எடுத்து வந்தார். அதில் ஒரு பக்கத்தைப் புரட்டி மகனிடம் கொடுத்து வாசிக்கச் சொன்னார்.

"இன்று என் செல்ல மகன் என்னிடம் ஜன்னலில் வந்தமர்ந்த ஒரு பறவையைக் காட்டி அது என்ன? என்று கேட்டான்.

காகம் என்று புன்னகையுடன் சொன்னேன். அவனுக்குப் புரியவில்லை போல! மீண்டும் மீண்டுமாய் இருபத்து மூன்று முறை என்னிடம் அது என்ன என்று கேட்டுக் கொண்டே இருந்தான். நான் ஒவ்வொரு முறையும் அவனைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்துக் கொணடே அது காகம் என்று சொன்னேன்.

"இன்று நான் ரொம்ப மகிழ்ச்சியாக உணர்ந்தேன்"! என்று எழுதியிருந்தது.

மகனின் கண்களில் கண்ணீர் வடிந்தது. இருபத்து மூன்று முறை தன் கேள்விக்கு அன்புடன் பதில் சொன்ன தந்தையையா நான்காவது முறை கோபத்தில் திட்டினேன் என மனம் வருந்தி தந்தையின் கரம் பிடித்தான்.

பெற்றோரின் அன்பைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் நாம் பெற்றோராய் மாற வேண்டும் என்பார்கள். கணணின் கருவிழி போல நமது குழந்தைகளை பதட்டத்துடனும், பாதுகாப்புடனும், அனபுடனும் பாதுகாப்பதைப் போலத்தான் நமது பெற்றோரும் நம்மைப் பாதுகாத்திருப்பார்கள் எனும் புரிதல் நமக்கு இருக்க வேண்டியது முக்கியம்.

ஒரு கெட்ட கனவு கண்டால் கூட தூர தேசத்தில் வசிக்கும் பிள்ளைகளுக்கு போன் செய்து பத்திரமாய் இருக்கச் சொல்லிப் படபடப்பதுதானே அன்னையின் அன்பு! பிள்ளைகளின் எதிர்காலத்துக்காகவோ, படிப்புக்காகவோ கிழிந்த வேட்டியையே தலைப்பு மாற்றிக் கட்டி நடப்பது தானே தந்தையின் பேரன்பு. பிள்ளைகளுக்காய் யோசிக்காமல் செலவு செய்யும் பெற்றோர், தங்களுக்காக என்று வரும்போது செலவு செய்யாமல் வெறுமனே யோசித்துக் கொண்டிருப்பார்கள் என்பதுதானே யதார்த்தம்?

நம்முன் உலவும் தெய்வங்களான பெற்றோருக்கு நாம் என்ன அன்பைத் திருப்பிக் கொடுக்கிறோம்?

வாழ்வின் சில தருணங்கள் தொலைந்தால் திரும்பக் கிடைப்பதில்லை. பெற்றோருடனான அன்பும் அப்படியே!

*- சேவியர்*

## பிழையின்றித் தமிழ் எழுதுவோம் - 5

*ஏழைசொல் - ஏழைச்சொல்*

ஏழை என்பதன் பொருள் என்ன? போதிய பொருள் வசதி இல்லாதவர், வறியவர் என்பதோடு, "ஏழு (7) எனும் எண்ணை" என்றும் பொருள்படும்.

சொல் என்பதன் பொருள் என்ன? ஒரு பொருள் குறிக்கும் ஒலி. பேச்சு, வாக்கு என்றெல்லாம் பொருள்படும்.

"ஏழைசொல் அம்பலம் ஏறாது" என்பது பழமொழி. வறுமையான, பொருள் வசதி இல்லாத ஓர் ஏழையின் சொல், அதாவது ஏழையின் பேச்சு கூட்டத்தில் எடுபடாது, ஏறாது.

இங்கே நாம் சொற்புணர்ச்சி விளக்கத்திற்காகச் "சொல்" என்பதற்குப் பேச்சு என்னும் பொருளைமட்டும் கொள்வோம்..

ஏழைச்சொல் என்றால், ஏழாம் எண்ணைச் சொல் என்பது பொருள். எண் வரிசையில் ஆறுக்கு அடுத்து வரும் எண்ணான (7) ஏழைச்சொல் என்பது பொருள்.

ஏழையின்சொல் என்று சொல்வதானால், எழுதுவ்தானால் அதை "ஏழைச்சொல்" என எழுதுவது தவறு. ஏழைசொல் எனச் சொல்லவேண்டும், எழுதவேண்டும்.

ஆறுக்கு அடுத்து வரும் ஏழு (7) எனும் எண்ணைச் சொல்வதானால், எழுதுவதானால் அதை ஏழைசொல் என எழுதுவது தவறு. ஏழைச்சொல் எனச் சொல்ல வேண்டும், எழுதவேண்டும்.

*ஏழைசொல் - ஏழையின் பேச்சு*

*ஏழைச்சொல் - ஏழாம் எண்ணைச் சொல்*

# 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியா 20 ஆம் நூற்றாண்டில் அமெரிக்கா 21 ஆம் நூற்றாண்டில் சீனா?


**21** ஆம் நூற்றாண்டில் அமெரிக்க-சீன போட்டியானது அதிகரிக்கும் என்பதற்கான காரணிகள் தெளிவாகத் தெரிகின்றன. குறிப்பாக தோற்கடிக்கப்பட்ட தேசியவாதியான Kuomintang ன் இறுதித் தங்குமிடமாக இருந்த தாய்வான் உள்ளடங்கலாக இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான மோதல் நிலைக்கான முக்கிய காரணங்கள் தெளிவாகத் தெரிகின்றன. சீனாவைப் பொறுத்தளவில் தாய்வான் ஒரு "துரோகம் இழைத்த மாகாணமாகவே" கருதப்படுகின்றது.

தாய்வானுடனான சீனாவின் உறவுநிலை பின்னர் சுமுகநிலையை அடைந்த போதிலும், சீனாவானது தற்போதும் தாய்வான் கால்வாயை ஊடறுத்து நூற்றுக்கணக்கான ஏவுகணைகளை நிலைநிறுத்தியிருப்பதால் இது தாய்வானை அச்சங்கொள்ள வைத்துள்ளது. தாய்வான் பாதுகாப்பிற்கு நிழல் பொறுப்பாளியாகவும், பிரதான ஆயுத வழங்குனராகவும் செயற்படும் அமெரிக்கா மீது பனிப்போர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது எந்த நேரமெனிலும் சுவாலை விட்டெரியலாம்.

தென் மற்றும் கிழக்கு சீனக் கடற் பிரதேசங்களில் அமைந்துள்ள தீவுக் கூட்டங்கள் மீதான சீனாவின் பிராந்திய மற்றும் வள ஆதிக்கமானது யுத்தம் மூள்வதற்கான பிறிதொரு காரணியாக அமைந்துள்ளது. அமெரிக்காவுடன் மட்டுமன்றி வியட்நாம் போன்ற அயல்நாடுகளுடனும் சீனா முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளது. வியட்நாம், அமெரிக்காவுடன் நெருக்கமான பாதுகாப்பு உறவுகளை ஏற்படுத்தி வரும் ஒரு நாடாகும்.

சீனாவின் பிராந்தியச் செல்வாக்கு அதிகரிப்பதானது ஜப்பான், தென்கொரியா, சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளிலும் அச்சத்தைத் தோற்றுவித்து வருகின்றது. இந்நாடுகள் தமது வர்த்தக உறவுகளை சீனாவுடன் மேற்கொண்டு வருகின்ற போதிலும் சீனாவின் பிராந்தியத் தலையீடு இந்நாடுகளிற்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

ஒபாமாவின் ஆசிய பயணத்தின் போது, டர்வின் மற்றும் சாத்தியப்பட்டால் பிலிப்பைன்சிலும் இராணுவத் தளம் ஒன்றை ஆரம்பித்தல் தொடர்பான சமிக்ஞையை வழங்கியிருந்தார். சீனாவை விட வடகொரியாவிற்கு எதிராக அதிகம் மேற்கொள்ள வேண்டியுள்ள போதிலும், தற்போது அமெரிக்காவின் ஜப்பானுடனான தொலை தூர ஏவுகணைப் பாதுகாப்பு ஒத்துழைப்பானது மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.




வேறு உலக நாடுகளில் நிலைநிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கப் படைகள் திருப்பி அழைக்கப்படுகின்ற போதிலும், தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய இரு நாடுகளிலும் தொடர்ந்தும் அமெரிக்கப்படைகள் தக்கவைக்கப்படுவர். அனைத்துலகக் கடல் எல்லைகளைப் பாதுகாப்பதற்கு அதி முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

இவற்றை விட அமெரிக்க சீன முறுகல் நிலைகக்கு குறிப்பிடத்தக்க வேறு காரணங்களும் உள்ளன. பூகோள - மூலோபாய விடயத்தைப் பொறுத்தளவில், இந்தியாவுடன் சீனா ஏற்படுத்திக் கொண்ட உறவின் பின்னால் உள்ள சீனாவின் நோக்கத்தைக் கண்டறிவதற்காக இந்தியாவுடன் புஷ் நிர்வாகத்தால் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கையை சமாளிககவே அமெரிக்கா விருப்பம் கொண்டுள்ளது.

பாகிஸ்தான், இலங்கை, தன்சானியா போன்ற நாடுகளுடன் வர்த்தக, நிதி, முதலீட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது செல்வாக்கை விரிவுபடுத்தும் வகையில் சீனா தனது முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இது தென்னாசியாவில் உள்ள ஆதிக்கம் மிக்க இந்தியாவிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதுடன் அமெரிக்காவிற்கு இது நெருக்கடியை ஏற்படுத்துவதாக உள்ளது.

அமெரிக்கா, பர்மாவுடன் இராஜீக உறவுகளை விரிவுபடுத்திக் கொண்டதன் மூலம் சீனாவிற்கு எதிரான போட்டியை அமெரிக்கா மேற்கொண்டது. அதாவது பர்மாவின் ஜனநாயகத் தலைவரான ஆங்சாங் சூயிக்கு ஆதரவு வழங்க விருப்பம் காட்டுவதென்பது உண்மையானதாகும். ஆனால் அமெரிக்கா இதில் தனது சொந்த நலனையும் கவனத்திற் கொண்டுள்ளது.

சீனா தனது வர்த்தகச் செயற்பாடுகளில் அதிக நனமைகளை அடைந்துள்ள ஆபிரிக்காவின் உப சகாராவில் தற்போது யுத்தத்திற்குத் தேவையான ஆயுத தள பாடங்கள், பொருளாதார வளங்கள், அரசியற் செல்வாக்கு, இராணுவப் பலப்படுத்தல்கள் என்பன மீளவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது லத்தீன் அமெரிக்காவிலும் அதிகரித்து வருகின்றது.

வடகொரியாவை சீனா பாதுகாப்பதன் ஊடாகவோ அலலது சிரியா, ஈரான், சூடான் போன்ற சிக்கலான பிராந்தியங்களிற்கு எதிரான நடவடிக்கைகளிற்கு சீனா தனது ஆதரவை வழங்குவதில் தயக்கம் காட்டினாலும் கூட, சீனா தற்போது அதிகரித்த இராஜதந்திர மற்றும் அரசியல் சவால்களை வழங்கி வருகின்றது.

வரலாற்று ரீதியாக, 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவும், 20 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவும் உலக வல்லரசாக இருந்தது போன்று இனிவருங்காலங்களில் சீனா வல்லரசாக வருவதற்காகச் செயற்படுகின்றது.

இதன் நம்பிக்கை, வளர்ச்சி, தனது சொந்த அதிகாரத்தில் உள்ள நம்பிக்கை என்பன இவ்வாறு சீனா உலக வல்லராசாக வருவதற்குக் காரணமாக அமையலாம். ஒபாமாவின் பாதுகாப்பு மூலோபாயக் கொள்கையானது சிறப்பாக இருக்க வேண்டும் என நம்பப்படுகின்றது. ஆனால் தீமைக்கு வழிவகுப்பதாக உருவாக்கப்பட்டுள்ளது.

- லண்டன் **The Guardian** கட்டுரையிலிருந்து

# ஜே.வி.பி கிளர்ச்சிக் குழுவால் ஜனநாயகத்திற்குப் பேராபத்து

## அரசாங்கம் எச்சரிக்கை



(கொழும்பு)

ஜே.வி.பி.யில் இருந்து பிரிந்து சென்றவர்கள் நாட்டின் ஜனநாயகத்திற்கு பேராபத்தை ஏற்படுத்தக் கூடிய கிளர்ச்சி ஒன்றுக்குத் திட்டமிட்டு வருவதாக தகவல் கிடைத்துள்ளதாக அரசாஙகம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தகவல் வெளியிடுகையில்,

ஜே.வி.பியில் இருந்து பிரிந்து சென்றோர், பாடசாலை மாணவர்கள் மத்தியிலும், பல்கலைக் கழக மாணவர் மத்தியிலும் தம்மை வீரர்களைப் போன்று காண்பித்து நாட்டின் இளம் சந்ததியினரின் எதிர்காலத்தை சீர்குலைக்க எத்தனிக்கிறார்கள்.

பல்கலைக்கழகங்களில் வன்முறைகளும், மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களும் எமது நாட்டுக்கு புதியதல்ல. முன்னர் இடம்பெற்ற பல்கலைக்கழக போராட்டங்கள் வேறு. இப்போது நடைபெறும் போராட்டங்கள் வன்முறையாக மாறி ஒரு கிளர்ச்சியாக உருவெடுக்கும் ஆபத்து உள்ளது.

ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்கள் மாணவர் மத்தியில் தங்கள் செல்வாக்கை அதிகரித்து பல்கலைக் கழக மாணவர்களை பலிக்கடாவாக்க எத்தனிக்கின்றனர். பொறுப்பற்ற சிறு பிரச்சினைகளை கூட பெரிதுபடுத்தி மாணவர்கள் இன்று போராட்டங்களை செய்து வருகிறார்கள்.

பெற்றோர், ஆசிரியர்கள், நாட்டு மக்கள் அனைவரும் தற்போதைய இந்த நிலை குறித்து அவதானமாக இருந்து இளைஞர் சமுதாயத்தை சிலர் அரசியல் நோக்கங்களுக்காக தவறான வழியில் இட்டுச் செல்வதை தடுக்க வேண்டும். இளம் சந்ததியினருக்கு சரியான வழிகாட்டலை கொடுக்க வேண்டும்.

ஜே.வி.பி கிளர்ச்சிக்குழுவினரின் சதித்திட்டங்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுகக வேண்டும் என்று கேட்டுக் கொண்டுளளார்.

# தரம் குறைந்த பட்டதாரிகள் உருவாகும் நிலை ஏற்படலாம்

## எச்சரிக்கிறது ஐ.தே.க.

(கொழும்பு

பல்கலைக்கழகங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினை எதிர்காலத்தில் தரம்குறைந்த பட்டதாரிகளை நாட்டில் உருவாக்க வழிசமைக்கும் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.

அதனால் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்காக குரல் கொடுக்க முன்வரும் அரசியல் கட்சிகள் மீதும் குற்றச்சாட்டுக்களை சுமத்தும் போக்கை அரசிடம் காண முடிவதாக திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றச்சாட்டுக்களை சுமத்தாது பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வழியை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சிறிலங்கன் விமான சேவைக்கு 6 விமானங்கள் கொள்வனவு



(கொழும்பு)

அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகருக்கும் தென் கொரியாவின் சியோல் நகருக்கும் புதிதாக சிறிலங்கன் விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிரியங்க ஜயரட்ண தெரிவித்தார்.

தற்போதுள்ள சிறிலங்கன் விமான சேவையில் 21 விமானங்கள் உள்ளன. அவை 27 ஆக அதிகரிக்கப்படும். தற்போதுள்ள இரண்டு 'சீ' பிளேன்களுடன் மேலும் மூன்று சீ பிளேன்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்

சிறிலங்கன் விமான சேவைக்குரிய ஏ. 330 ரக மற்றும் ஏ. 340 ரக பழைய விமானங்கள் அனைத்தும் நவீன மயப்படுத்தப்படும். ஏ. 330 ரக, ஏ. 340 ரக விமானங்களும் புதிதாக கொள்முதல் செய்யப்படவுள்ளன. தற்போது சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ள 'ஏயார் டெக்ஸி' சேவை தினமும் 14 சேவைகளை நடத்துகிறது.

ஏனைய நாடுகளுடன் விமான சேவை நடத்தும்போது ஏற்படும் போட்டியை சமாளிக்கும் விதத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான சேவையை விஸ்தரிக்கும் தேவையும் ஏற்பட்டுள்ளது. எனவே மத்திய கிழக்கில் சவூதி அரேபியா போன்ற நாடுகளுக்கு சிறிலங்கன் விமான சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது.


இதற்காக புதிய விமானங்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பிரியங்க ஜயரட்ண தெரிவித்தார். 2011ஆம் ஆண்டில் சிறிலங்கன் விமான சேவை இந்தியாவின் கொச்சின் நகருக்கும், சீனாவின் முகாசி நகருக்கும் ரஷ்யாவின் மாஸ்கோ நகருக்கும் புதிதாக சேவையை விஸ்தரிக்கவுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# சட்டவிரோதமாக தங்கியிருந்த மாணவர்கள் விளக்க மறியலில்

(கொழும்பு

மாணவர்களுக்கு தடைசெய்யப் பட்ட வலயமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக வளாகத்தில் தங்கியிருந்த போது கைது செய்யப்பட்ட இரண்டு மாணவர்களையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கங்கொடவில நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம். அதிகாலை ஒரு மணியளவில் குறித்த மூன்று மாணவர்களும் பல்கலைக்கழக வளாகத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்தபோது கைதுசெய்யப்பட்டதாக மிரிஹான பொலிஸார் தெரிவித்துள்ளனர். சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் இருவரே மறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.



இதேவேளை பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டில் கல்வி பயிலும் தேரர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.'

ஆறு பிக்கு மாணவர்களுக்கு விதிக்கப் பட்டுள்ள வகுப்புத் தடையை நீக்குமாறு வலியுறுத்தியே வகுப்புப் பகிஷ்கரிப்பை தேரர்கள் மேற்கொண்டுள்ளனர்.

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகைத்தடை அரசின் குற்றச்சாட்டிற்கு மறுப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை கிடைக்கக்கூடாது என்பதற்காக பிரசாரம் மேற்கொண்டதாக அரசாங்கம் வெளியிட்ட குற்றச்சாட்டுக்கு சுதந்திர ஊடக மையம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

எனினும், ஜி.எஸ்.பி பிளஸ் கிடைக்க வேண்டுமானால் இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் தொடர்பிலான கடப்பாட்டை நிறைவேற்ற வேண்டும் என்றே தாம் பிரசாரம் செய்ததாக சுதந்திர ஊடக இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுதந்திர ஊடகங்களுக்கு எதிராக மக்களை திருப்புவதை நோக்காக கொண்டதாகும் என இயக்கத்தின் அமைப்பாளர் சுனில் ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் நாட்டை விட்டு வெளியேறியுள்ள தமது இயக்கத்தின் உறுப்பினர்களான சுனந்த தேசப்பிரிய, போதல ஜெயந்த மற்றும் உவிடுகுருகுல சூரிய ஆகியோர் தம்முடைய கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடும் உரிமைகளைக் கொண்டுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், ஜி.எஸ்.பி பிளஸ் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அரசாங்கம் மனித உரிமைகளை தொடர்பில் உரிய முறையில் செயற்படுத்த வேண்டியது அதன் கடமையாகும் என்று ஜெயசேகர சுட்டிக் காட்டியுள்ளார்.

## 10 ஆயிரம் தொன் அரிசி சோமாலியா செல்கிறது

சோமாலியாவிற்கு மேலும் பத்தாயிரம் மெற்றிக் தொன் அரிசியை நிவாரணமாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஒரு மாத காலத்திற்குள் அரிசியை அனுப்பி வைக்க உத்தேசித்துள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்துள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகளில் உள்ள நெல்லினால் அரிசியை உற்பத்தி செய்து அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சுற்றுலா செல்லும் நாடுகளின் பட்டியலில் இல்லாத இலங்கை

(கொழும்பு)

அனைத்துலக ரீதியாக பிரபலம் வாய்ந்த 'நியுயோர்க் ரைம்ஸ்' ஏடு வெளியிட்டுள்ள, 2012 ஆம் ஆண்டில் சுற்றுலா செல்வதற்கான மிகச்சிறந்த 45 நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம்பெறவில்லை.

2012 ஆம் ஆண்டில் சுற்றுலா செல்வதற்கான மிகச்சிறந்த 45 இடங்களை 'நியுயோர்க் ரைம்ஸ்' கடந்த 6 ஆம் திகதி பட்டியலிட்டு வெளியிட்டுள்ளது.

தங்காலை விடுதியொன்றில் கடந்த நத்தார் தினமன்று பிரிததானிய சுற்றுலாப் பயணி சுட்டுக்கொல்லப்பட்டு அவரது நண்பியான ரஷ்யப் பெண் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவத்தை அடுத்தே இலங்கை இந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவை தளமாக கொண்ட 'National Geographic Traveler' என்ற சஞ்சிகை, 2012 ஆம் ஆண்டின் சுற்றுலா செல்வதற்கு சிறந்த நாடுகளில் ஒன்றாக இலங்கையையும் தெரிவு செய்திருந்தது.

அதேபோல பிரித்தானியாவின் 'Condé Nast Traveller' என்ற இதழ் 2012 இல் சுற்றுலா செல்வதற்கு மிகச்சிறந்த 5 இடங்களில் ஒன்றாக 'இலங்கையையும் தெரிவு செய்து பட்டியலிட்டிருந்தது.

ஆனால் நத்தார் நாளன்று நிகழ்ந்த சம்பவத்தினால், 'நியுயோர்க் ரைம்ஸ்' வெளியிட்ட சுற்றுலா செல்வதற்கு உகந்த மிகச்சிறந்த 45 இடங்களில் பட்டியலில் இலங்கை இடம்பெற முடியாமல் போயுள்ளது.

இது இலங்கையின் சுற்றுலாத்துறை அதிகாரிகளையும், சுற்றுலா விடுதித்துறையினரையும் பெரிதும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

கடந்த ஆண்டில் இலங்கைக்கு 8 இலட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர். 2016 ஆம் ஆண்டில இலங்கை 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இலக்கை நிர்ணயித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் குற்றச் செயலில் ஈடுபட்ட இலங்கைத் தமிழர் நாடு கடத்தல்



Name: SELLATHAMBY, Tharmapaskaran
Alias:
SELLATHAMBY, Tharmabaskar
SELLATHAMBY, Baskaran
Gender: Male
Date of Birth: 1951-02-18
Place of Birth: Sri Lanka
Last Known Address:
Toronto, Ontario
Identifying Features:
Mole: Left cheekbone below eye
Missing front tooth

High resolution (jpg, 13 KB)

This individual is inadmissible to Canada for serious criminality for being convicted of aggravated assault.

(கொழும்பு

கனேடிய அரசாங்கத்தால் தீவிரமாகத் தேடப்பட்டு வந்த இலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட தமிழர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் ரொரன்டோ- ஒன்ராரியா பகுதியில் வசித்து வந்த இலங்கைத் தமிழரான செல்லத்தம்பி தர்மபாஸ்கரன் என்பவர் பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

61 வயதான இவரை கனடாவில் இருந்து நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கனேடிய குடிவரவு எல்லை முகவர் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த நபர் மிக மோசமான தாக்குதல் சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்டுள்ளவர் என கனேடிய குடிவரவு எல்லை முகவர் நிலைய தலைவர் லக்போர் டெலன்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் குற்றச் செயல்களில் செல்லத்தம்பி பாஸ்கரன் ஈடுபட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள அவர் விரைவில் இலங்கைக்கு நாடு கடத்தப் படுவார் என அவர கூறியுள்ளார்.

கனடாவில் அகதி அந்தஸ்துக் கோரி நுழைந்த செல்லத்தம்பி பாஸ்கரன் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டு இலங்கைக்கு திரும்புமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் மறைவாக இருந்து வந்துள்ளார்.

கடனாவில் தேடப்பட்டு வரும் 90 முக்கிய குற்றவாளிகளில் 15 ஆவது நபராக செல்லத்தம்பி பாஸ்கரன் கைது செய்யப்பட்டுள்ளார்.


கீழே தரப்பட்டுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைக்க கருத்து நிறைந்த சொற்கள் பெறப்படும். அவற்றுள் வித்தியாசமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

36) 1) யிகுல்　2) யிமல்　3) ருகுவி　4) ருளது

37) 1) னாமை　2) மைஆ　3) டுண்ந　4) ல்றாஇ


38) ஒன்றின் மீது ஒன்று பொருந்தத்தக்க உருவங்கள் ஒருங்கிசை உருவங்கள் எனப்படும். கீழ்வரும் உருக்களில் ஒருங்கிசை உருவங்களைக் கொண்ட விடை எது?

1)　2)　3)　4)




39) கீழே ஒரு விலங்கின் உடலின் பகுதிகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் பொருத்தமற்று உள்ளது. பொருத்தமற்ற விடையின் கீழ்க் கோடிடுக.

1)　2)　3)　4)



40) கீழ்வருவோரில் உயிர்காக்கும் பணியுடன் தொடர்புடையவர்.

1)　2)　3)　4)



பொருத்தமான எழுத்தை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக.

41) 1. வி.........யாட்டு (லை, ளை)　2. ம..........க்கலாம் (லை, ழை)

3. ம.......ணெண்ணெய் (ன், ண்)　4. வி...........ணப்பம் (ண், ன்)

5. செ.........ளர் (ளா, லா)

## கடந்த வெள்ளிக்கிழமை வெளியான வெளியீடு - 14 கேள்விகளின் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. D | 15. மாவட்டச் செயலகம் | 30. 29 | 46. X |
| 02. C | | 31. 5 | 47. 150ml |
| 03. B | 16. 02 | 32. 3, 6 | 48. 3995 |
| 04. வட்டம் | 17. 01 | 33. 10 | 49. 19km 570m |
| 05. முக்கோணி | 18. 2/4, 1/2 | 34. கட்டுமரம் | 50. 4422 |
| 06. 03 | 19. 3/8 | 35. படகு | 51. 12/- |
| 07. 15 | 20. 2/4, 1/2 | 36. பாய்க்கப்பல் | 52. பொருத்தமான விடைக்குப் புள்ளியிடுக. |
| 08. முக்கோணி, சதுரம் | 21. அதர்மம் | 37. X | |
| 09. ஆட்பதிவுத் திணைக்களம் | 22. பிறப்பு | 38 X | 53. பொருத்தமான விடைக்குப் புள்ளியிடுக. |
| | 23. வெறுப்பு | 39. X | |
| 10. தபாற்கந்தோர் | 24. முருங்கயிலை | 40. X | 54. மின்விசிறி, கிரைண்டர் |
| 11. கிராமசேவகர் அலுவலகம் | 25. தென்னோலை | 41. X | 55. 1. வியாழன் |
| | 26. திராட்சையிலை | 42. √ | 2. புதன் |
| 12. பொலிஸ் நிலையம் | 27. செலவு, விரயம் | 43. √ | 56. மனிதன், மாடு, மீன், பறவைகள் |
| 13. வங்கி | 28. பணம், செல்வம் | 44. X | 57. மாலை நேரத்தில் |
| 14. நீதிமன்றம் | 29. பிறப்பு, ஜனனம் | 45. √ | 58. மண்வெட்டி, பை |



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

1 மணி 15 நிமி

## கல்வி முரசு


வெளியீடு 15



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.


கீழ்வரும் உருக்களில் ஒன்று வித்தியாசமானது. வித்தியாசமான உருவின் கீழ்க் கோடிடுக.

01)




(1)　(2)　(3)　(4)　(5)

02)




(1)　(2)　(3)　(4)　(5)

03)




(1)　(2)　(3)　(4)　(5)

04)



(1)　(2)　(3)　(4)　(5)

05)



(1)　(2)　(3)　(4)　(5)

06)

| | | |
|---|---|---|
| க | ய் | மீ |
| வா | ண | ந |
| சு | ண் | |

அருகேயுள்ள கூட்டினுள் உள்ள எழுத்துக்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் நீர்வாழ் உயிரினம் ஒன்றின் பெயரை எழுதுக.

..............................................................................

07)

| | |
|---|---|
| N | E |
| T | P |

பெட்டியில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு,

1) எழுதுவதற்குப் பயன்படும் ஒரு பொருளின் பெயரை எழுதுக..............................

2) இலக்கம் ஒன்றின் பெயரை எழுதுக..............................

08) ஒரு கிலோ சீனி 38.00 ரூபாவாயின் 500 கிராம் சீனியின் விலை என்ன?

..............................................................................

09) ஐந்து ரூபா வீதம் எட்டுப் பேனாக்கள் வாங்கும் பணத்திற்கு எட்டு ரூபா வீதம் எத்தனை பேனாக்கள் வாங்கலாம்?..............................


10) அருணியிடம் 19 பலூன்கள் இருந்தன. அருணி 3 பலூன்கள் வீதம் அடங்கிய 7 பலூன் கொத்துக்களை ஆக்க விரும்பினாள். அவளது எண்ணம் நிறைவேறி இருக்குமா? ஏன்?


......................................................................................................


**11 முதல் 12 வரையான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள விபரணத்துடன் ஒத்துப் போகும் விடைக்குரிய இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**


11) சாம்பவி
- இவர் நடு உச்சி பிரித்து தலை சீவுவார்.
- எப்போதும் இரட்டைப் பின்னலுடன் காணப்படுவார்.
- எப்போதும் கண்ணாடி அணிந்திருப்பார்.
- சாம்பவிக்கு பொட்டு போடுவது விருப்பம் இல்லை.

பின்வரும் படங்களில் சாம்பவியைக் காட்டும் படம் எது?


(1)



(2)



(3)



(4)

12) கமலன்
- காலையில் பாடம் படிப்பார்.
- மாலையில் விளையாடுவார்.
- ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை வேளையில் நீந்துவார்.
- இரவு வேளையில் படம் பார்ப்பார்.

இன்று ஞாயிறு காலை 6.00 மணியாகும். இப்போது கமலன் என்ன செய்து கொண்டிருப்பார் என்பதைத் தெரிவு செய்க.


(1)


(2)


(3)


(4)

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

13) (அறம், அரம்) செய்ய விரும்பு.
14) ஆறுவது (சிணம், சினம்)
15) உடையது (விளம்பேர், விலம்பேல்)
16) ஆலயம் (தொளுவது, தொழுவது) சாலவும் நன்று.
17) கறிக்கு (புளி, புலி) விடுவது சுவையானது

**கீழே சில கோலங்கள் விபரிக்கப்படுகின்றன. அவற்றை விளக்கி வெற்றிடத்தை நிரப்புக.**

18) (25) → (7) (625) → (13) (125) → (8) (325) → ( )

19)

| 2 | 3 | 5 | 7 |
|---|---|---|---|
| 4 | 9 | 25 | |

20)

| 123 | 1234 | 12345 | |
|---|---|---|---|
| 6 | 10 | 15 | 21 |



**மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

21) நான்கிற்குப் பதினாறு அமைவது போல் பத்துக்கு?
1) ஐம்பது 2) அறுபது 3) நூறு 4) இருபது

22) இலங்கை மாணவர்களுக்கு இலவசமாகக் கிடைப்பவை.
1) சீருடை 2) பாடநூல் 3) இலவசபோதனை 4) மேற்சொன்ன மூன்றும்

23) இலங்கையில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுவது?
1) மே -1 இல் 2) பெப்ரவரி-4 இல் 3) ஒக்டோபர்-6 இல் 4) ஜனவரி - 1 இல்

24) அபாயத்தின் நிறம்?
1) சிவப்பு 2) பச்சை 3) கறுப்பு 4) மஞ்சள்

25) சமாதானப் பறவை?
1) கிளி 2) புறா 3) கழுகு 4) தீக்கோழி

26) சதுரமுகி ஒன்றுக்கு உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை?
1) 08 2) 06 3) 12 4) 10

27) 20 cm பக்க நீளமுடைய கம்பியினால் ஆன முக்கோணி வடிவ உரு ஒன்று நீட்டப்பட்டு சதுர வடிவ உரு ஒன்று ஆக்கப்பட்டது. அச்சதுர வடிவ உருவின் ஒரு பக்க நீளம்?
1) 05 cm 2) 15 cm 3) 60 cm 4) 80 cm


28) பென்சில் ஒன்று ரூபா 5.50, பேனா ஒன்று ரூபா 10.50 இவ்விலைப்படி பேனா, பென்சில் ஒவ்வொன்றிலும் 10 இனை வாங்கும் ஒருவர் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?
1) ரூபா 55.00 2) ரூபா 105.00 3) ரூபா 160.00 4) ரூபா 16.00

29) 3 வாரத்தை மணித்தியாலமாக மாற்றினால் விடை?
1) 3 x 7 2) 3 x 24 3) 7 x 24 4) 3 x 7 x 24


30) 15 இலும் கூடிய ஒற்றை எண் எது?
1) 16 2) 17 3) 13 4) 14

31) V + X - IX + VIII என்பதன் பெறுமானத்தை இந்து அராபிய இலக்கமாக எழுதுக.
......................................................................................................

32) நீங்கள் வாழும் நாட்டின் பெயரை எழுதுக.
......................................................................................................

33) 
அருகேயுள்ள கூட்டினுள் வரையப்பட்டுள்ள உருவகங்களில் ஒரு உருவம் ஏனைய வற்றிலிருந்து வேறுபடுகின்றது. அதன் பெயரை எழுதுக.
......................................................................................................

34) புது..........தானம் இந்த இடைவெளியில் ஓர் எழுத்தை எழுதும் போது வேறுபட்ட கருத்துடைய இரு சொற்கள் பெறப்படும். அச்சொற்களை எழுதுக.
......................................................................................................

35) 
அருகேயுள்ள உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.
......................................................................................................

விசேட வினாத்தாள் II - தரம் 05 - 2012 - கல்விமுரசு

# இங்கிலாந்திற்கு எதிரான தொடரை வெற்றிகொள்வதே இலக்காகும்

## பாகிஸ்தான் அணித் தலைவர் கூறுகிறார்



இங்கிலாந்துக்கு எதிரான கிரிக்கெட் தொடரை வெற்றி கொள்வதே தமது இலக்கு என பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை டுபாயில் ஆரம்பமாகவுள்ளது.

இதற்காக டுபாய்க்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் குழாம் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு இங்கிலாந்து கிரிக்கெட் விஜயத்தின் போது ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டதாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் சல்மான் பட் உள்ளிட்ட மூவருக்கு விசாரணைகளின் பின்னர் போட்டித் தடையுடன் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இதன் காரணமாக இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இம்முறைத் தொடர் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

எவ்வாறாயினும் இம்முறை தொடரை வெற்றி கொள்வது குறித்தே அணி வீரர்களும் முழுக கவனம் செலுத்தி வருவதாக மிஸ்பா உல் ஹக் தெரிவித்தார்.

அத்துடன் ஆட்ட நிர்ணயம் தொடர்பில் தமது அணி வீரர்கள் நடந்துகொண்ட விதத்தை இங்கிலாந்து அணி மறந்து விட வேண்டும்.

இந்த விவகாரம் பாகிஸ்தான் கிரிக்கெட்டை பெரிதும் பாதித்துள்ளதாகவும், இனி ஒருபோதும தமது வீரர்கள் அவ்வாறு நடந்து கொள்ளமாட்டார்கள் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அணி வீரர்கள் சிறந்த மன வலிமையுடன் காணப்படுகின்றனர் என பயிற்றுநரான நவிட் அக்ரம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். மூன்று டெஸ்ட், நான்கு ஒருநாள் மற்றும் மூன்று சர்வதேச இருபதுக்கு இருபது போட்டிகள் இத்தொடரில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# விமர்சனங்கள் குறித்து கவலைப்படுவதில்லை



என்னுடைய துடுப்பாட்ட பாணி குறித்து சகீர்கான் கூறியுள்ள கருத்து சச்சின், ராவிட், கலிஸ் ஆகியோருக்கும் பொருந்தும். ஆனால் அவருடைய கருத்தைப் பற்றி நான் கவலைப்படமாட்டேன் என்று அவுஸ்ரேலிய வீரர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பொண்டிங் சிறப்பாக ஆடினாலும், அவரிடம் பழைய துடுப்பாட்ட முறையைக் காண முடியவில்லை. இப்போது அவருடைய ஆட்டம் மாறுபட்டுள்ளது. அவருடைய இயல்பான ஆட்டம் அவரிடம் இப்போது இல்லை என்று சகீர் கான் கூறியிருந்தார். அதற்குப் பதிலடி தரும் வகையில் பொண்டிங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து அவர் மேலும் கூறியது:

கடந்த சில மாதங்களாகவே கடுமையாக உழைத்து வருகிறேன். அதனாலேயே ஓட்டங்களைக் குவிக்க முடிந்தது. சகீர்கானோ அல்லது வேறு யாரோ என்ன சொன்னாலும், அதைப் பற்றி நான் கவலைப்படுவதிலலை. நான் என்ன செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும் என்றார்.

உலகில் உள்ள மற்ற அணிகளோடு ஒப்பிடும்போது இந்திய அணி விரைவாக சுருண்டு விடும் என்று அவுஸ்ரேலிய விக்கெட் காப்பாளர் பிரட் ஹாடின் தெரிவித்திருந்த கருத்து குறித்துப் பேசிய பொண்டிங், கடந்த போட்டிகளைப் போலவே வரும் போட்டிகளிலும் சிறப்பாகப் பந்துவீசி நெருக்கடியை ஏற்படுத்துவோம். எங்களுடைய வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசி வருவதால் எங்களால் இந்திய அணிக்கு நெருக்கு தலை ஏற்படுத்த முடியும் என்றார்.

# டெஸ்ட் கிரிக்கெட் அணியில் இடம்பிடிப்பாரா ஜோன்சன்?

ஐந்து தொடக்கம் ஆறு வருடங்கள் போட்டிகளில் பங்குபற்ற எதிர்பார்த்துள்ளதாக அவுஸ்ரேலிய வேகப் பந்துவீச்சாளர் மிச்சேல் ஜோன்சன் கூறியுள்ளார்.



அவுஸ்ரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணியில் மீண்டும் இடம் பிடிப்பதற்கு இந்தியன் பிறிமியர் லீக் போட்டிகளை பயன்படுத்தவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்க அணியுடன் நடைபெற்ற போட்டியின் போது உபாதைக்குள்ளான மிச்சேல் ஜோன்சன் இந்தியாவுடனான போட்டிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் மார்ச் - ஏப்ரல் மாதங்களில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான தொடரில் இருந்தும் 30 வயதான மிச்சேல் ஜோன்சன் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விலகினார் பெட்கோவிச்



(பேர்லின்)

அவுஸ்ரேலிய பகிரங்க ரெனனிஸ் போட்டிகளிலிருந்து, ஜேர்மனின் அந்த்ரா பெட்கொவிக் உபாதை காரணமாக விலகியுள்ளார்.

சர்வதேச ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் 10 ஆவது இடத்தை இவர் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் திங்கட்கிழமை அவுஸ்ரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடர் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# படுதோல்வியடைந்தது இலங்கை அணி

இலங்கை அணியுடனான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 258 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.



302 ஓட்டங்கள் எனும் இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 43 ஓட்டங்களுடன் சகல விகெட்டுகளையும் இழந்து படுதோல்வியடைந்தது.

ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை அணி பெற்ற மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

1986 ஆம் ஆண்டு சார்ஜாவல் நடைபெற்ற மேற்கிந்திய அணிக்கெதிரான போட்டியில் இலங்கை அணி 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தமையே இதுவரை அவ்வணியின் மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

2004 ஆம் ஆண்டு இலங்கை அணிக்கெதிராக சிம்பாப்வே அணி பெற்ற 35 ஓட்டங்களே ஒருநாள் சர்வதேச போட்டியொன்றில் ஓர் அணி பெற்ற மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கையாகும்.

இந்தப் போட்டியில் இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான உபுல் தரங்க, திலகரட்ன டில்ஷான் இருவரும் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

தினேஷ் சந்திமால், குமார் சங்கக்கார இருவரும் தலா 4 ஓட்டங்களுடனும் ஏஞ்சலோ மத்தியூஸ் ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழந்தபோது இலங்கை அணி 9 ஓட்டங்களை மாத திரமே பெற்றிருந்தது.

மஹேல ஜயவர்த்தன 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 6 ஆவது விக்கெட்டாக ஆட்டமிழந்தார். அப்போது இலங்கை அணி 13 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது.

இலங்கை அணியின் சார்பில் ஆகக்கூடுதலாக கோசல குலசேகர 19 ஓட்டங்களைப் பெற்றார். நுவன் குலசேகர 6 ஓட்டங்களையும் லஷித் மாலிங்க ஒரு ஓட்டத்தையும் அஜித் மெண்டிஸ் 3 ஓட்டங்களையும் பெற்றனர். தில்ஹார பெர்னாண்டோ ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார்.

தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களில் மோர்ன் மோர்கெல் 10 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் சோட்சோப் 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். ரொபின் பீட்டர்சன் 5 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் டேல் ஸ்ரெய்ன் 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முன்னதாக, தென்னாபிரிக்க அணியின் சார்பில் ஹஸிம் அம்லா 112 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஜக் கலிஸ் 72 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஏ.பி.டி.வில்லியர்ஸ் 52 ஓட்டங்களையும் பெற்றனர். இலங்கை பந்துவீச்சாளர்களில் லஷித் மலிங்க 54 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக மோர்ன் மோர்கெல் தெரிவானார்.

# மலேசிய ஓப்பன் பட்மின்ரன் முதல் சுற்றில் சாய்னா வெற்றி



(கோலாலம்பூர்)

மலேசிய ஓப்பன் பட்மின்ரன் தொடரின் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவல் வெற்றி பெற்றார்.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில், மலேசிய ஓப்பன் பட்மின்ரன் தொடர் நடக்கிறது. நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், இந்தியாவின் சாய்னா, சிங்கப்பூரின் ஜுயன் குவை எதிர்கொண்டார்.

முதல் செட்டை 19-21 எனக் கோட்டைவிட்ட சாய்னா, இரண்டாவது செட்டை 21-14 என தன் வசப்படுத்தி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் அபாரமாக ஆடிய சாய்னா, 21-15 என கைப்பற்றினார். இறுதியில் சாய்னா 19-21, 21-14, 21-15 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.





வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணத்திலுள்ள மாவட்டங்களுக்கிடையேயான ஊர்சுற்றும் போட்டி கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவில் இடம்பெற்றது. இதில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஜெயந்தன், இரண்டாமிடத்தை கிளிநொச்சியைச் சேர்ந்த வி.லோகாரதன், மூன்றாமிடத்தை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.எஸ்.குமார ஆகியோரும், பெண்கள் பிரிவில் முதலிடத்தை முல்லைத்தீவைச் சேர்ந்த எஸ்.கேமா, இரண்டாம், மூன்றாமிடத்தை வவுனியாவைச் சேர்ந்த ஆர்.சாலினி, எஸ்.சஞ்சிகா ஆகியோர் பெற்றதுடன், சான்றிதழ் மற்றும் கிண்ணங்களுடன் நிற்பதைக் காணலாம்.


தமிழர்களின் கலை கலாசார
பாரம்பரியங்களைப் பறைசாற்றும்
யாழ்ப்பாணத் திருவிழா
பொங்கல் 2012
2012 தைத்திங்கள் 11 முதல் 15 வரையில்
தினமும் காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரையில்
போட்டிகள் - பொழுதுபோக்கு நிகழ்வுகள்
கலை நிகழ்ச்சிகள் - வர்த்தக சந்தை
13-01-2012
படகோட்டும் போட்டி - குருநகர் கடற்கரை
மரதன் ஓட்டப் போட்டி - யாழ் முனியப்பர் கோவில் முன்பாக
பொங்கல் போட்டி
யாழ்பாடி நாட்டுக் கூத்து
14-01-2012
சைக்கிள் ஓட்டப் போட்டி
மாற்றுத் திறனாளிகளுக்கான
-முச்சக்கரவண்டி போட்டி
மாட்டுவண்டிச் சவாரி
தென்னிந்தியக் கலைஞர்களின்
இசை நிகழ்ச்சி
15-01-2012
கிளித்தட்டு - கபடி - கிறிஸ்மரம் ஏறுதல்
தயிர் முட்டி உடைத்தல்
சாண்டோ சாகசங்கள்
மாபெரும் இசை நிகழ்ச்சி
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
LIBRARY JAFFNA
இன்னும்.....
இராட்சத இராட்டினம் - மஜிக் நிகழ்வுகள்
மற்றும் பல பொழுதுபோக்கு நிகழ்வுகள்
பிரவேசம் இலவசம்
அனைவரும் திரண்டு வாரீர்
யாழ் மாநகரசபை
(இ)

# சோனியா பெயரில் போலி குடும்ப அட்டை!

இந்தியச் செய்திகள்

மகாராஷ்டிராவில் உள்ள தானே மாவட்டத்தில் உல்ஹஸ்நகர் மாநகராட்சி அருகே உள்ள வாகனங்கள் நிறுத்தப்படும் இடம் அருகே காங்கிரஸ் தலைவர் சோனியா பெயரில் உள்ள போலி குடும்ப அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ள இந்தக் குடும்ப அட்டையில் ராகுல் மற்றும் பிரியங்கா ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளது. டெல்லி விலாசத்தில் இடம்பெற்றுள்ள இந்த அட்டையில் குடும்பத் தலைவரின் வருமானம் ரூபா 30 ஆயிரம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிராமண சமுதாய முதல்வர் மாட்டுக்கறியை உண்பாரா?



(சென்னை)

பிராமண சமுதாயத்தில் இருந்து வந்த முதல்வர், மாட்டுக்கறி உண்பாரா? என்ற தவறான எண்ணத்தை மக்கள் மனதில் நக்கீரன் செய்தி உருவாக்கிவிட்டது என கூறியுள்ளார் ஜெயலலிதா.

நக்கீரன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தி தொடர்பாக அந்த பத்திரிகையின் ஆசிரியர் கோபால், இணை ஆசிரியர் காமராஜ் மீது முதல்வர் ஜெயலலிதா நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜெயலலிதா நேற்று முன்தினம் தாக்கல் செய்த மனுவில், என்னைப் பற்றி வெளியிடும் செய்திகள் தவறு என்று தெரிந்தே தொடர்ந்து தவறான மற்றும் அவதூறான தகவல்களை நக்கீரன் கோபாலும், காமராஜும் வெளியிட்டு வருகின்றனர். பத்திரிகை விறபனைக்காக கீழ்த்தரமாக செயற்படுகின்றனர்.

எம்.ஜி.ஆரும், நானும் எந்த நேரத்திலும் மாட்டுக்கறி சாப்பிட்டதில்லை. எம்.ஜி.ஆர்.தனது வாழ்நாளில் ஒருநாள் கூட அதை உட்கொண்டதில்லை. நானும் இதுவரை மாட்டுக்கறியை தொடவில்லை. இந்த நிலையில் முற்றிலும் பொய்யான, உண்மைக்கு மாறான கட்டுரையை வெளியிட்டது குற்ற உள்நோக்கம் கொண்டது.

எனவே இது நீதிமன்ற உத்தரவை மீறி வெளியிடப்பட்ட செய்தி என்பதால், அவர்கள் 2 பேரும் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்கு உள்ளாகிறார்கள். அவர்கள் நீதிமன்றையும் அவமதிப்பு செய்துள்ளதால் அந்தக்குற்றத்தின் கீழ் அவர்களை தண்டிப்பது அவசியமாகும்.

அந்த அவதூறான செய்தி, எனது நற்பெயருக்கும், மதிப்புக்கும் மட்டுமல்ல, எனது தனிப்பட்ட வாழ்க்கையையும் பாதிக்கும் விதமாக அமைந்து விட்டது. மாட்டுக்கறியை சமைத்து எம்.ஜி.ஆருக்கு பரிமாறினேன் என்பதோடு, நானும் அதை சாப்பிட்டேன் என்று வந்துள்ள இந்தச் செய்தி, உண்மைக்குப் புறம்பானது.

இந்தச்செய்தி, பிராமண சமுதாயத்தில் இருந்து வந்த முதல்வர், மாட்டுக்கறி உண்பாரா? என்ற தவறான எண்ணத்தை மக்கள் மனதில் உருவாக்கிவிட்டது. ஆகவே,கோபாலும், காமராஜும் எனது தனிப்பட்ட வாழ்க்கையின் குணநலன்களை கொச்சைப்படுத்தி விட்டனர்.

அரசியலமைப்பு சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள தனிமனித சுதந்திரம் மற்றும் தனிப்பட்ட வர்ழ்க்கையைப் பாதிக்கும் விதமாக குற்ற உள்நோக்கத்துடன் இந்தச்செய்தியை வெளியிட்டுள்ளனர். இதுபோன்ற செய்திகளைத்தொடர்ந்து வெளியிட அனுமதித்தால் நான் கடுமையாக பாதிக்கப்படுவேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீரப்பனை இழிவுபடுத்தும் "வனயுத்தம்" தடைசெய்ய கோருகிறார் விஜயலட்சுமி

வீரப்பன் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்டு வரும் வனயுத்தம் படம் வெளியாக தடை விதிக்க வேண்டுமென வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், வனயுத்தம் படம் ஒரு மோசடியான வேலை. வீரப்பன் எனது கணவர். அவரைப் பற்றிய படத்தை எடுக்கும் இயககுநர் ரமேஷ், குறைந்தபட்சம் எனது சம்மதம் கூட கேட்காமல் வீரப்பன் பற்றி வனயுத்தம் படத்தை எடுத்து வருகிறார்.

இந்தப் படம் தொடர்பாக 2 முறை என்னை சந்தித்து பேசியுள்ளார். பொய்யான தகவல்களை அவர் பரப்பி வருகிறார். மேலும் பழ.நெடுமாறன், இயக்குநர் கவுதமன், கொளத்தூர் மணி ஆகியோரை சந்தித்து தகவல்களைத் திரட்டியதாகவும் கூறி வருகிறார்.

இதில் துளி அளவுகூட உண்மை இல்லை. எனது கணவரை வைத்து சினிமா எடுத்து சம்பாதிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் ரமேஷ் செயறபடுகிறார். எனவே இந்த படத்தை தயாரிப்பவர்கள் இதற்குத் துணை போகவேண்டாம். எனது



வேடத்தில் நடிக்கும் நடிகை அரைகுறை ஆடையுடன் வருவது போலவும் படத்தில் காட்சிகள் இடம் பெறுகின்றன. எனது கணவர் பற்றிய வழக்குகள் இன்னும நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. இந்த நிலையில் அவரைப் பற்றி பொய்யான தகவலகளுடன் வெளிவரும் இது போன்ற படங்கள் சட்டத்துக்கு புறம்பானவையாகும். எனவே எனது கணவரை காட்டுக் கொள்ளையன்போல சித்திரித்து எடுககப்பட்டுள்ள வனயுத்தம் படத்தை தடை செய்ய வேண்டும். இது தொடர்பாக நீதிமன்றத்தில் நான் வழக்கும் தொடர்ந்துள்ளேன் எனத்தெரிவித்துள்ளார்.



# தி.மு.க வின் துணைத்தலைவராக கனிமொழி நியமனமாகலாம்?

(சென்னை)

அடுத்த மாதம் மூன்றாம் திகதி சென்னையில் கூடவுள்ள திமுகவின் பொதுக் குழுக் கூட்டத்தில் கனிமொழிக்கு கட்சியின் துணைத்தலைவர் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் திமுக தலைவர் கருணாநிதியின் இந்தத் திட்டத்துக்கு பொருளாளர் ஸ்டாலின் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

கலைஞர் ரிவி விவகாரத்தில் எந்தத் தவறும் செய்யாத கனிமொழி, கட்சிக்காகவே சிறைக்குச் செல்ல நேர்ந்ததாகவும், இதனால் அவருக்கு முக்கிய பதவி தரப்பட வேண்டும் என்றும் அவரது தாயார் ராசாத்தி அம்மாள் வலியுறுத்தி வருகிறார்.

அரசியலையே கூட விரும்பி ஏற்காத கனிமொழி, கட்சிக்காக செய்த தியாகங்கள் மிக அதிகம் என்று கூறி வரும் ராசாத்தி அம்மாள், அவருக்கு எதிர்காலத்தில் கட்சியில் போதிய அங்கீகாரம் தரப்பட வேண்டும் என்கிறார்.

ஆனால், இதை ஸ்டாலின் விரும்பவில்லை என்று தெரிகிறது. இருப்பினும் ஸ்டாலினின் எதிர்ப்பையும் மீறி கனிமொழிக்கு முக்கிய பதவி வழங்க திமுக தலைவர் கருணாநிதி திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பெப்ரவரி 3ஆம் திகதி கூடும் திமுக பொதுக் குழுவில், கனிமொழிக்கு துணைத் தலைவர் பதவியும், ஸ்டாலினுக்கு பதவி உயர்வாக துணைப் பொதுச் செயலாளர் பதவியும் தரப்படலாம் என்கிறார்கள்.

தான் அரசியலில் தீவிரமாக இருக்கும்போதே, கனிமொழிக்கு கட்சியில் முக்கிய இடத்தைத் தந்துவிட கருணாநிதி முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

# பதிவிறக்கப் பெட்டகம்

பெரும்பாலான மக்களுக்கு என்று தனி சொத்து கிடையாது. அவர்கள் பொது ஆதாரத்தை நம்பி இருக்கிறார்கள். அவர்களின் ஆடு பொது இடத்தில் மேய வேண்டி இருக்கிறது. அவர்களின் மாடு பொது இடத்தில் மேய வேண்டி இருக்கிறது. இவர்கள் விறகை பொது இடத்திலிருந்து எடுக்க வேண்டி இருக்கிறது. தண்ணீரை பொது இடத்திலிருந்து எடுக்க வேண்டி இருக்கிறது. அதையெல்லாம் தனியாரிடத்தில், ஒரு முதலாளி இடத்தில் ஒப்படைத்துக் கொண்டே இருக்கிறார்கள். அப்போது வறுமைக் கோட்டிற்கு உள்ளே இருக்கின்ற கோடானுகோடி மக்களை அழிவை நோக்கித் தள்ளிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்களை விளிம்புக்கு வெளியே இருக்கின்ற மக்கள் என்று சொல்வார்கள். அவர்களை மேலும் சாவை நோக்கித் தள்ளுவதற்குத்தான் இந்தத் திட்டங்கள் எல்லாம் செல்லுபடியாகும். ஆக, கிராமங்களில் இருக்கின்ற நிலங்கள் மூன்றே மூன்றிற்குத் தான் பயன்படுத்தப்பட வேண்டும். ஒன்று : மழைநீர் பெருக்கெடுத்து ஓடி கடலில் கலக்காதபடி அங்கேயே குளம் வெட்டுவதறகுப் பயன்படுத்த வேண்டும். இரண்டு : அங்குள்ள ஆடு, மாடுகள் மேய்வதற்காக மேய்ச்சல் நிலங்களை உண்டு பண்ண பயன்படுத்த வேண்டும். மூன்று : அங்கேயும் காற்று சுத்தமாக, மழை வர, குளிர்ச்சி நிலவ வேண்டும் என்பதற்காக மரங்களை நட பயன்படுத்த வேண்டும். இந்த மூன்றிற்கும் தவிர, வேறு எதற்கும கிராமத்தின் நிலத்தை இவர்கள் கொடுக்கிறார்கள் என்றால், வேறு ஏதோ ஆதாயம் கருதி செய்கிறார்கள் என்று அர்த்தமே தவிர நாட்டு நலனுக்காக செய்வதற்காக அல்ல. **– நம்மாழ்வார்**

அறிதல் வேட்கையோடு அண்ணாந்து பார்க்கத் தெரிந்தவன் மனிதன் மட்டும்தான். அதேசமயம் உயிரினத்திலேயே இயற்கையிலிருந்து தன்னை அந்நியப்படுத்திக் கொள்கிறவன் மனிதன் மட்டும்தான். அவன் இயற்கையோடு ஒட்டிக்கொள்ள முயன்றாலும் அவன் அறிவு அவனை இயற்கையின் காந்தப் புலனுக்கு வெளியே இழுத்தெறிந்து விடுகிறது. அதனால் வீழ்ச்சியானது மனிதனுடைய வளர்ச்சியாகிறது. "அறிவு கெட்டவன்" என்று சொல்லத் தகுதியுள்ள அறிவுள்ள பிராணி இவன் மட்டும்தான். **– கவிதாசரண்**

சதைகள் சுருங்கி மண்டை காய்ந்து நைந்து நொய்ந்து போன உடையுடன் கண்ணீர் மல்க காட்சியளிக்கும் இவர்கள் நகராட்சியின் துப்புரவுப் பணியாளர்கள். புழு நெளியும் மலத்தை அள்ளவும், உயரமான லாரியில் மல டின்னை தூக்கி நிறுத்தவும், குழ குழத்துப்போன செப்டிக் டேங்கில் இறங்கி நாற்றம் சகித்து உள்ளிருந்து அழுக்கை வெளியே அப்புறப்படுத்தவும், கழிவுநீர் வாய்க்கால்களைக் கழி விட்டுத் தள்ளவும், சமயத்தில் கையால் அள்ளவும் உழைத்த களைப்புத் தீரவும்.... ஆக இப்படியான நேரத்தில் இவர்களுக்குப் போதை தேவைப்படுகிறது. இவர்கள் குடிக்கப் பிறக்கவில்லை. வாழ்க்கை அப்படி ஆக்கியிருக்கிறது. **– விழி. பா. இதயவேந்தன்**

மாலத்தீவில் அந்த dodo பறவைகள் ரொம்ப சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தன. இந்துமகா கடலில் மாலத்தீவு என்பது ரொம்ப அழகாக இருக்கிறதென்று நிறையப் பேர் சுற்றுலாவிற்குச் சென்றார்கள். அப்படிப் போனவர்கள் நல்ல சுகத்தை அனுபவித்தார்கள். போனவர்கள் சும்மா போகவில்லை. துப்பாக்கியுடன் போனார்கள். இந்தப் பறவைகளுக்கு இவர்கள் தன்னைச் சுடுவார்கள் என்று தெரியாததால் அது சாதுவாக உட்கார்ந்திருந்ததால் அதை சுட்டுச் சுட்டே தின்றார்கள். அப்படியே ஒரு பறவை கூட மிச்சமில்லாத அளவிற்கு சுட்டுச் சுட்டு தின்றிருக்கிறார்கள். இப்போது தான் அவர்களுக்குத் தெரிய வருகிறது dodo இல்லை என்றால், கல்வேரியமரங்கள் முளைக்காதென்று. **– நம்மாழ்வார்**

மனிதர்களால் இயற்கையைக் கட்டுப்படுத்தவோ, பிரதிசெய்யவோ முடியாது. அதை வளைக்கமுடியும், நீட்ட முடியும், நோண்ட முடியும். ஏதாவது எக்குத்தப்பாக எதிர்வினையாற்றினால் அழிய முடியும். குழந்தையிடம் கொடுக்கப்படும் பொம்மையைப் போலத்தான். பொம்மை உடைந்தபின்னர்தான் குழந்தை அழும். அதுவரை அதை கவனமாகக் கையாளச் சொன்னால் கேட்காது.

க்டவுளாக விரும்பும் அறிவியலாளர்களுக்கு இவ்வுலகம் பொம்மைதான். **– ராஜன்குறை**

இயற்கையை வேட்டையாடி, காட்டை அழித்து, நீரையும் நிலத்தையும் ரசாயனக் கழிவுகளால் நஞ்சூட்டி, கடலை கதிரியக்கக் கழிவுகளால் சீரழித்து, வானத்து ஓசோன் படலத்தை சல்லடைக் கண்களாய் துளைத்து, வாழ்க்கை இனி சாத்தியமில்லை எனும் அழிவின் விளிம்புக்கு இந்த உலகத்தை நெட்டித்தள்ளிய அறிவு நல்லதை நாடி மீளுமா?. **– கவிதாசரண்**

# வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு சிறந்த சாரதிகளை உருவாக்க பயிற்சி

## அமைச்சர் குமார வெல்கம தெரிவிப்பு


(கொழும்பு)

வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் இலங்கை போக்குவரத்துச் சபை சிறந்த சாரதிகளை உருவாக்கும் புதிய வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதி பயிற்சிப் பாடசாலைகளில் குறைந்த செலவில் சாரதி பயிற்சியினைப பெற்றுக்கொள்ள முடியும் என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

தனியார் பயிற்சி பாடசாலைகளில் பெருந்தொகையான பணம் அறவிடப்படுவதால் பயிற்சிக்கென செல்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்

அத்துடன் அநேகமான இடங்களில் சிறந்த பயிற்சிகள் அவர்களுக்குக் கிடைக்கப் பெறுவதில்லை. இதனைக் கருத்திற் கொண்டே இந்த விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதி பயிற்சிப் பாடசாலைகளின் ஊடாக 17 வயதைக் கடந்த சிறந்த தேக ஆரோக்கியமுள்ள எவரும் இந்தப் பயிற்சியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்பயிற்சியின்போது இலகுரக வாகனங்களுக்காக 6 ஆயிரத்து 500 ரூபாவும், 

பார ஊர்திகளுக்காக 9 ஆயிரம் ரூபாவும் அறவிடப்படுகிறது.

இதைவிடபலமடங்கு அதிகமான தொகையினை தனியார் சாரதி பயிற்சிப் பாடசாலைகளில் அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது நாட்டின் பல பாகங்களில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 10 சாரதி பயிற்சிப் பாடசாலைகள் உள்ளன. அவற்றை 12 ஆக அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த வேலைத்திட்டத்தினூடாக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு மேலதிக வருமானத்தினை பெற்றுக் கொள்ள முடிவதுடன் சிறந்த பயிற்சியுடன்கூடிய சாரதிகளையும் உருவாக்க முடியும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாடசாலை சேவை வான்சாரதி மாணவி மீது துஷ்பிரயோகம்

(கொழும்பு)

கொழும்பு பிராந்தியத்தைச் சேர்ந்த பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் சிறுமி ஒருவரை பாடசாலை வானுகுள் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்த நபரைக் கைது செய்வதற்கு சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்பைக் கோருமாறு கொழும்பு மேலதிக நீதவான் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

குறிப்பிட்ட சிறுமியைத் தினமும் பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் வானின் சாரதியே இந்தச் சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார். ராகமையைச் சேர்ந்த இந்த மாணவியை அவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய பின், சிறுமியின் நிர்வாணத் தோற்றத்தையும் ஒளிப்பதிவு செய்துள்ளார். இந்த வழக்கு பெப்ரவரி 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## ஆயுதங்கள் மீட்பு

(வவுனியா)

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் மிகப் பாதுகாப்பாக புதைத்து வைக்கப்பட்டிருந்த இரு தன்னியக்கத் துப்பாக்கிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 81 மற்றும் ரி 56 வகையைச் சேர்ந்த தன்னியக்கத் துப்பாக்கிகளே இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவை கிறிஸ் பூசி பொலித்தீனில் சுற்றி பாடசாலை மைதானததிலுள்ள மரம் ஒன்றின் அடியின் குழியில் மூடி வைக்கப்பட்டிருந்தபோது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

## கிராமசேவகர் பிரிவிற்கு 10இலட்சம் வழங்கப்படும்

(கொழும்பு)

கமநெகும வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள அனைத்து கிராமசேவகர் பிரிவுகளுக்கும் 10 இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில்இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய, பதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய, பிரதேச சபை உறுப்பினர்களின் கீழுள்ள கிராமசேவகர் பிரிவுகளில் சிறந்த அபிவிருத்திதிட்டங்களை முன்னெடுக்க முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த வருடத்தில் சகல மாகாண சபை உறுப்பினர்களுக்கும் 150 இலட்சம் ரூபா வீதம் வழங்கப்படும் எனவும் அவா மேலும் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் மேர்வினுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

பொது மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கட்சியின் யாப்பு விதிகளுக்கு அமைய கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

களனி பிரதேச சபைத் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களினால், அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார். விசாரணைகளில் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் உரியநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## தங்காலை கொலைச் சம்பவ விசாரணை ரஷ்ய, பிரிட்டன் நாடுகள் பாராட்டு



(கொழும்பு)

தமது பிரஜைகள் மீது தங்காலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் இலங்கை மேற்கொண்டு வரும் விசாரணைகளை ரஷ்யாவும் பிரித்தானியாவும் பாராட்டியுள்ளன.

அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன இதனை தெரிவீத்துள்ளார்.

தங்காலையில் கடந்த கிறிஸ்மஸ் தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலின்போது, பிரித்தானிய பிரஜையான சர்வதேச செஞ்சிலுவை சங்க பணியாளர் Kuram Saikh என்பவர் கொல்லப்பட்டார். அவருடைய நண்பியான ரஷ்யாவை சேர்ந்த Victoria Alexandrovna என்பவர் காயங்களுக்கு உளளானார்.

அவர்,பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இந்தநிலையில் விக்டோரியா பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளமையை அமைச்சர் யாப்பா கண்டித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்கவுக்கு அந்த அதிகாரம் இல்லையென்றும்,சட்ட வைத்திய அதிகாரி ஒருவருக்கே அந்த அதிகாரம் உள்ளதாகவும் யாப்பா கூறினார்.

பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, இலங்கையில் மீண்டும் விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்திருப்பது குறித்து கருத்துரைத்துள்ள அமைச்சர் யாப்பா, படையினர் இந்த விடயத்தில் விழிப்பாக செயற்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

எனவே பயம் கொள்ளத்தேவையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொது இட நீர்க்குழாய்களை அகற்றுவதற்கு நடவடிக்கை

பொது இடங்களில் உள்ள நீர்க்குழாய்களை அகற்றுவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது. பொது நீர்க்குழாய்கள் மூலம் நீரைப் பெற்றுவந்த மக்களுக்கு குறைந்த செலவில் வீடுகளுக்கான நீர்க்குழாய் வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பொது இடங்களில் காணப்படும் நீர்க்குழாய்களில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நீர் வீண் விரையமாவதாகவும் சிலர்வேறு தேவைகளுக்காக நீரைப் பயன்படுத்துவதாகவும் இதனால் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு நட்டம் ஏற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தங்கக் கட்டிகளைக் கடத்தியவர் கைது

சட்டவிரோதமான முறையில் தங்கக் கட்டிகளை வெளிநாட்டிற்குக் கொண்டு செல்ல முற்பட்ட இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 18 தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டதாக விமான நிலைய சுங்கப் பிரிவு தெரிவித்தது.

இந்தத் தங்கக் கட்டிகளை சந்தேகநபர் உடலில் மறைத்துக் கொண்டு இந்தியாவின் மும்பை நகருக்குக் கொண்டுசெல்ல முயற்சித்துள்ளார். நேற்றுக் காலை கைப்பற்றப்பட்ட தங்கக் கட்டிகள் சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியானவை என விமான நிலைய சுங்கப் பிரிவு தெரிவித்தது.

## 'ஒன்லைன்' வீசா கட்டண அறவீடு; 10 நாளில் ஏழு கோடி வருமானம்

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கை வரும் வெளிநாட்டவர்களிடமிருந்து 'ONLINE' வீசாவுக்காக அறவிடப்படும் கட்டணம் மூலம் கடந்த 10 நாட்களுக்குள் மாத்திரம் 7 கோடி ரூபா பணம் வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் பிரதம கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலரத்ன பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த 10ஆம் திகதி நள்ளிரவு முதல் நேற்று முன்தினம் நண்பகல் வரையான காலப் பகுதிக்குள் மாத்திரம் சுமார் 2000 வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கைக்குள் வருபவர்களுக்கு இதுவரை காலமும் இலங்கை இலவச வீசா வழங்கி வந்துள்ளது.

இந்நிலையில், இலவச வீசா வழங்கும் நடைமுறை 2011 டிசம்பர் 31ஆம் திகதி முதல் இரத்துச் செய்து அதற்கு பணம் அறவிடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. ஜனவரி முதலாம் திகதி முதல் வெளிநாடுகளிலிருந்து இலங்கை வரும் வெளிநாட்டவர்களிடமிருந்து கடந்த 10 நாட்களுக்குள் 7 கோடி ரூபா அறவிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

## தரங்குறைந்த பெற்றோல் விற்பனை முயற்சி தோல்வி

(கொழும்பு)

அரசாங்கம் விதித்த நிபந்தனையின் கீழ் மாசடைந்த பெற்றோலை வாங்குவதற்கு எவரும் முன்வராததால், மாசடைந்த பெற்றோலை விற்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் கைகூடவில்லை எனத் தெரியவருகிறது.

"எமிரேட்ஸ் நஷனல் ஒயில்" கம்பனியின் சிங்கப்பூர் கிளையிலிருந்து கடந்த வருடம் 2000தொன் எரிபொருளை இலங்கை இறக்குமதி செய்தது.

இந்த எண்ணெய் தரங்குறைந்தது என அறியப்பட்டதும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் விநியோகத்தை நிறுத்தியது. பின்னர் எஞ்சியிருந்த 2600 தொன் எரிபொருளை நியாயமான ஒரு விலைக்கு விற்க தீர்மானித்த அமைச்சு அதற்கென கேள்விப்பத்திரங்களை கோரியது.

ஒரேயொரு சர்வதேச நிறுவனமே இதை வாங்க முன்வந்தது. ஆனால் அந்தக் கம்பனியின் நிர்பந்தனைகளுக்கு ஒப்புக் கொள்ளாததால் அதுவும் விலகிக் கொண்டது என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாம் வேறு கேள்விப் பத்திரங்களை கோரியுள்ளோம். பொருத்தமான கேள்வி வரும்போது நாம் கையிருப்பை விற்போம் எனவும் அமைச்சர் கூறினார்.

தற்போது மேற்படி தரக்குறைவான எரிபொருள் கையிருப்பு கொலன்னாவையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

# அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு தனிப்பட்ட நபர்கள் வழங்க முடியாது

(கொழும்பு)

அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் பொலிஸாரைத் தவிர வேறு எந்த தனிப்பட்ட நபர்களையும் அரசியல்வாதிகள் தமது பாதுகாப்புக்காக பணிக்கு அமர்த்தக்கூடாது என்று பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

அரசியல் வாதிகளின் தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் இணைப்புச் செயலாளர்கள் பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் என புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்துள்ள அறிக்கை ஒன்றில்தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கிய அரசியல்வாதிகளின் தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக கடமையாற்றி வரும் பாதாள உலகக் குழு உறுப்பினர்களை விரைவில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளனர்.

வெளிநபர்கள் அரசியல்வாதிகளின் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தால் தராதரம் பாராது அவர்களை கைது செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார். பொலிஸார் அமைச்சுப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவத்தினரைத் தவிர வேறு தரப்பினர் அரசியல்வாதிகளை ஆயுதமேந்தி பாதுகாக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சிரமதானம்

(நல்லூர்)

கொக்குவில் கிழக்கு தலயாழி வைரவர் ஆலயச் சுற்றாடலை தலையாழி இராணுவத்தினர் சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர்.

இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் உதயகுமார தலைமையில் இச்சிரமதானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஊதிய உயர்...

இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் ஊழியர்களுக்கு 18 வீத சம்பள உயர்வு வழங்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

## கல்வியியற் கல்லூரி புதிய மாணவர் அனுமதி

(வவுனியா)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் 2012/2014 ஆம் கல்வி ஆண்டுக்கான புதிய மாணவர் அனுமதி எதிர்வரும் ஜனவரி 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. புதிய அனுமதிக்காக ஏற்கனவே வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்து கொண்டவர்கள் ஜனவரி 18ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்குப் பெற்றோருடன் சமுகமளிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அன்றைய ஆரம்ப நிகழ்வுகளுக்குப் பின்னர் பத்து நாட்களுக்கு திசைமுகப்படுத்தல் பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளன.

புதிய மாணவ ஆசிரியர்கள் விடுதியில் தங்கிப் பயிற்சியைத் தொடர்வதற்கான ஆயத்தங்களுடன் வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அத்துடன் தமது வைத்தியப் பரிசோதனைகளை முடித்துள்ளதுடன், ஒப்பந்தப் படிவங்களையும் பூரணமாகப் பூர்த்தி செய்து எடுத்து வரவேண்டும்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2012/2014 ஆம் கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட 175 பேரில் இதுவரை 134 பேர் தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ளனர். வெவ்வேறு பயிற்சி நெறிகளுக்காக 41 பேர் இதுவரை பதிவு செய்து கொள்ளவில்லை. இவர்களது தெரிவு இரத்துச் செய்யப்பட்டு காத்திருப்போர் பட்டியலில் இருந்து புதிய மாணவர்கள் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பதிவு செய்யாதவர்களின் தெரிவை இரத்துச் செய்வதற்கான கடிதங்கள் பதிவுத்தபால் மூலம் ஏற்கனவே அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## அளவுக்கு அதிகமான பயணிகள் அபராதம் செலுத்தினார் சாரதி

அதிகளவான பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து ஒன்று நேற்று முன்தினம் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

குறித்த பஸ்ஸில் உள்ளடக்கக்கூடிய பயணிகளுக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்ற இந்த பஸ் வண்டியை பொலிஸார் மடக்கிப் பிடித்து பஸ்ஸின் சாரதியை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

மேற்படி வழக்கினை விசாரணை செய்த நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து அவர் மீது 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அதேவேளை, தனியார் பஸ்ஸில் அதிகளவான பயணிகளை ஏற்றிவரத் தடை செய்ய வேண்டும். என்றும் பயணிகளின் நலன் கருதி பஸ் நடத்துநர்கள் செயற்பட வேண்டும் என்றும் நீதவான் எச்சரிக்கை விடுத்தார். (எஸ்)

## கூட்டுறவுத் துறையினருக்கு விசேட பயிற்சிப் பட்டறை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் பொது முகாமையாளர், உட்துறை கணக்காய்வாளர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான விசேட பயிற்சிப் பட்டறை நேற்றுக்காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவுச் சபையின் தலைவர் இராஜாராம் தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறியினை வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் அருந்தவநாதன் ஆரம்பித்து வைத்தார். இப்பயிற்சியினை ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எஸ். கணேசமூர்த்தி நெறிப்படுத்தினார்.

இப்பயிற்சிப் பட்டறையில் பலநோக்கு கூட்டுறவுச் சங்க உட்துறை கணக்காய்வுகளின் அவசியமும், முறைமைகளும் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

2012 ஆம் ஆண்டின் உட்துறை பயிற்சித் திட்டத்தின் முதலாவது பயிற்சிப் பட்டறை இதுவாகும்.

## யாழ்ப்பாணத்....

செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

பொங்கல் திருவிழாவினை முன்னிட்டு யாழ்.மாநகர சபை ஏற்பாடு செய்துள்ள விளையாட்டு நிகழ்வுகள் மாணவர்களின் திறமையை வளர்க்கச் சாதகமாக அமையும் என்று யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச சபைகளும் ஒன்றிணைந்து 8 ஊர்திகளை ஏற்பாடு செய்து பொங்கல் தொடர்பாக நேற்றுக் கோலாகல மாக வீதிகளில் பவனி வந்தன.

இன்று மேலும் பல விளை யாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. காலை 6.00 மணிக்கு கடல் சார்ந்த போட்டியான நீச்சல், வள்ளமோட்டல், படகோட்டல் போட்டிகள் இடம்பெறும். குருநகர் கடலில் இப்போட்டிகள் நடைபெறும். தொடர்ந்து முனியப்பர் கோவிலின் முன்றலில் காலை 8.00 மணியளவில் மரதன் ஓட்டப் போட்டி ஆரம்பமாக உள்ளது.

நாளை சனிக்கிழமை மீண்டும் முனியப்பர் கோவிலின் முன்றலில் சைக்கிளோட்டப் போட்டி காலை 6 மணிக்கு ஆரம்பமாகி இடம் பெறவுள்ளது. இதில் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்வர். மேலும் மாற்றத் திறனாளிகளுக்கான போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

நாளை மதியம் 12.00 மணியளவில் பண்டத்தரிப்பு, விளான் மைதானத்தில் மாட்டு வண்டிச் சவாரி விசேட நிகழ்ச்சியாக இடம் பெறவுள்ளது. இதற்கு முல்லைத்தீவு, மன்னார், பூநகரி பிரதேசத்தில் இருந்து சுமார் 125 போட்டியாளர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை இரவு நேர நிகழ்வுகள் மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதில் இந்தியக் கலைஞர் கோபாலின் மஜிக் காட்சிகள் இடம்பெறவுள்ளது.

இதுதவிர யாழ்.மாநகர சபை வளாகத்தில் சிறுவர்களை ஊக்குவிக்கும் முகமாக சிறுவர் விளையாட்டுப் போட்டிகள் இன்று காலை ஆரம்பமாகவுள்ளது.

இதன்படி 3 நாட்களாக இடம் பெறும் திருவிழா விளையாட்டுப் போட்டிகளில் 222 போட்டியாளர் கள் பங்குபற்றவுள்ளனர்.

இதில் கலந்து கொண்டு வெற்றி பெறுபவர்களுக்குப் பெறுதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. கஷ்டமான போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வெற்றி பெறுவோருக்கு முறையே 10 ஆயிரம், 5 ஆயிரம், 3 ஆயிரம் ரூபா எனப் பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

பரிசில்கள் அனைத்தும் போட்டியின் இறுதி நாளான ஞாயிற்றுக் கிழமை வழங்கப்படும். இவ் ஊடகவிய லாளர் சந்திப்பில் நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.மாணிக்கராசா மற்றும் ஆசிரியர் செல்வவடிவேல் ஆகியோர் கலந்து கொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். (எப்.எஸ், எஸ்)

## இறுதி யுத்தம்...

அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது,

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை நாம் ஆராய்ந்துள்ளோம். இன்னும் அதனை படித்து வருகிறோம். ஆணைக்குழு சில பகுதிகளை மையப்படுத்தி புனர்வாழ்வு, சட்ட ஒழுங்கு தொடர்பில் பரிந்து ரைகளை முன் வைத்துள்ளது. ஆணைக்குழுவின் பரிந்துரை களை விரைந்து உறுதியாக செயற்படுத்துமாறு கனடா வலியுறுத்துகிறது. அதே போன்று ஆணைக்குழு தவறவிட்ட விடயங்களிலும் இலங்கை அரசு கவனம் செலுத்த வேண்டும். ஆணைக்குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டால் அது பிரச்சினைக்குரிய பகுதிகளில் அரசியல் சமரசத்தை ஏற்படுத்த வழிவகுக்கும். ஆனால் அந்த நடவடிக்கைகளை செயற்ப டுத்துவதில் இலங்கையிடம் தீர்க்கமான திட்டம் இல்லை என்பதனை நாம் கடந்த காலங்களில் அவதானித்துள் ளோம்.

இறுதிக் கட்ட யுத்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆணைக்குழு முழுமையான தகவல்களை வெளியிடவில்லை. ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ள பல மனித உரிமை மீறல்கள் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் உள்ளடக்கப் படவில்லை. இறுதிக் கட்ட யுத்தத்தில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இரு தரப்பினர் தொடர்பிலும் சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என கனடா தொடர்ந்தும் வலியுறுத்துகிறது. இலங்கை அரசு சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி கொள்கைகளை நிலைநாட்ட வேண்டும். இவ்வாறு கனேடிய வெளி விவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## இந்திய அமைச்சர்...

டில்லியில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள இப்பயண நிகழ்ச்சி நிரலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்புக்கள் பற்றி எந்த குறிப்புக்களும் இடம்பெறவில்லை எனவும், முதலாவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையே சந்திப்பார் எனவும் வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்எம்.கிருஷ்ணா கொழும்பில் தங்கியிருக்கும் போது குறைந்தது ஆறு இருதரப்பு உடன்பாடுகளில் கையெழுத்திடவுள்ளாதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித் தார்.

அதேவேளை, மேற்படி பயண நிகழ்ச்சி நிரலில் இறுதி நேரத்தில் ஏதாவது மாற்றங்கள் செய்யப்பட்டால் மட்டுமே கூட்டமைப்பின் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கான வாய்ப்புக்கள் தோன்றும் என்றும், இல்லையேல் அத்தகைய சந்திப்புக்கு வாய்ப்பே இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மாணவனை...

சிவில் பாதுகாப்பு அடையாள அட்டையைக் காட்டி அம்மாணவனை அவ்விடத்தை விட்டு நகரவிடாமல் அச்சுறுத்தி தாக்குதல் நடத்த முற்பட்டுள்ளனர்.

தகவலறிந்து ஸ்தலத்திற்கு வந்த பொலிஸார், இருவரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். விசா ரணைகளின் பின்னர் பல்கலைக் கழக மாணவனை விடுவித்ததுடன், சிவில் பாதுகாப்புக்குழு உறுப்பினரை தடுத்து வைத்துள்ளனர்.(எப்.எஸ்)

## யாழ்.பொலிஸ்...

மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நீல் தளுவத்த, 512 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி அஜித் பல்லேவல, யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோராலும் அடிக்கற்கள் நாட்டி வைக்கப்பட்டன.

ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ள யாழ் பொலிஸ் நிலையம் யாழ் துரையப்பா விளையாட்டரங்கை அண்மித்த பகுதியில் செயற்பட்டு வந்தது.

இந்த நிலையில் 1984 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி தாக்குதலுக்கு உள்ளாகி முற்றாகச் சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது. இப்புதிய கட்டடத்திற்கு 294 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(எப்.எஸ், எஸ்)

## பெறுபேறுகளில்...

திருத்துவது தொடர்பாக எவ்வித யோசனையையும் முன்வைக்கவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் கூறியுள்ளது. 'Z' புள்ளி தொடர்பில் அந்த குழு ஆராயவில்லை என சங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய மற்றும் பழைய பாட விதானங்களுக்கு ஒரே Z புள்ளி முறையில் கணிப்பீடு களை மேற் கொண்டமையினால் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் பேராசிரியர் ஆர்.ஓ. தட்டில் சுட்டிக்காட்டியிருந்ததாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த பெறுபேறுகளை இரத்துச் செய்து சரியான பெறுபேறுகளை வெளியிடுமாறும் அந்த சங்கம் சுட்டிக்காட்டுகின்றது.

# இந்திய வீட்டுத்திட்டம் மூன்று கட்டங்களாக இடம்பெறும்



இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள 49000 வீட்டுத் திட்டத்தை மூன்று கட்டங்களாக செயற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்திய அரசாங்கத்தின் 13.19 பில்லியன் ரூபா நிதி உதவியில் இத்திட்டம் செயற்படுத் தப்படவுள்ளது. இதன்படி முதற்கட்டமாக தலா 550,000 ரூபா செலவில் 38,000 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதோடு, நான்கு தவணை முறையில் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு பணம் செலுத்தப்படவுள்ளது.

இரண்டாம் கட்டமாக 5,000 வீடுகள் நிர்மாணிக்கப்பட வுள்ளதோடு, அதற்கான பணம் மூன்று தவணை முறையில் பயனாளிகளுக்கு நேரடியாக கையளிக்கபடவுள்ளது. மூன்றாம் கட்டமாக 6,000 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இவ்வீடுகள் போரின்போது வடக்குக் கிழக்கு பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்களுக்காக செயற்படுத்தப்படவுள்ளன.

அதனைத் தவிர மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கென 4,000 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

வடக்குக் கிழக்கு வீட்டுத் திட்டப் பணிகளை மீள்குடியேற்றத்திற்கான ஜனாதிபதி செயலணி மற்றும் வடக்கு அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு பிரிவு ஆகியவற்றால் கண்காணிக்கப்படவுள்ளது.

அதேபோன்று மத்திய மற்றும் ஊவா மாகாண வீட்டுத் திட்டங்களைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கண்காணிக்கவுள்ளது.

இது தொடர்பிலான அமைச்சரவை பத்திரத்தை சிறிலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமர்பித்ததோடு, அதற்கு அனுமதியும் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை வரும் பயணிகளின் விசாக் கட்டணத்தில் மாற்றம்

(கொழும்பு)

இலங்கை வரும் இடைத் தங்கல் பிரயாணிகள் மற்றும் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு விசா கட்டணத்திலிருந்து விலக்களிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித துள்ளதாக ஊடகத்துறை அமைசசர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார். 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் 48 மணித்தியாலங்கள் வரை தங்கியிருக்கும் இடைத தங்கல் பிரயாணிகளுக்கும் விசா கட்டணம் அறவிடாதிருப்பது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் முன்மொழியப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் வெளிநாட்டவர்கள் பிள்ளைகளுடன் இலங்கைக்கு வரும் வாய்ப்பு அதிகரிக்கும் என அமைச்சர் ஹெகலிய மேலும் தெரிவித்தார். இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கு இணையத்தளத்தின் ஊடாக விசாவை பெறுவதற்கான அனுமதியை ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பஸ் நடத்துனரின் நாணயமான செயல்

புத்தளம் பிரதேச இ.போ.ச பஸ்ஸில் தவறவிடப்பட்ட சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளுடன் கூடிய கைப்பையினை பஸ்ஸின் நடத்துனர் அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளார். ஆர்.எம்.டி. மைக்கல் எனும் நடத்துனரே இவவாறு இந்த தவறவிடப்பட்ட கைப்பையினை பஸ்ஸில் இருந்து கணடெடுத்து டிப்போவில் ஒப்படைத்தவராவார்.

புத்தளம் பஸ் டிப்போவில் இடம்பெற்றுள்ள இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த 9 ஆம் திகதி பகல கல்பிட்டியிலிருந்து புத்தளம் ஊடாக குருணாகல் செல்லும் பஸ்ஸில் புத்தளம் நகருக்கு வந்துள்ள திருமணமான தம்பதியினர் தம் வசமிருந்த கைப்பையினை பஸ்ஸில் தவறவிட்டு விட்டு இறங்கிச் சென்றுள்ளனர். குறித்த கைப்பையை பஸ்ஸில் இருந்து கண்டெடுத்த பஸ்ஸின் நடத்துனர் அதனை தான் கடமையாற்றும் புத்தளம் பஸ் டிப்போவில் ஒப்படைத் துள்ளார். தவறவிடப்பட்ட கைப்பையை அன்றையதினம் மாலையில் புத்தளம் பஸ் டிப்போ முகாமையாளர் எல்பி. ஸ்வர்ணசிறி என்பவரால் அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# கண்டியில் உலக ஹிந்தி தினவிழா பங்குபற்றத் தூதரகம் அழைப்பு

(கொழும்பு)

கண்டியில் உலக ஹிந்தி தின விழா எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறும் என இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உலக ஹிந்தி தின விழாவை முன்னிட்டு கண்டி உதவி இந்தியத் தூதரகம் இந்திய மொழியிலான கட்டுரை, பேச்சு போன்ற போட்டி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான முன்னேற பாடுகளை மேற்கொண்டு வருவதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி உதவி இந்திய தூதரக கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ள உலக ஹிந்தி மொழி தின விழாவில் நடைபெறவுள்ள போட்டி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் மற்றும் கற்கை நிலையங்கள் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 0094 81 2222652, 812223786 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



தலிபான் தீவிரவாதிகளின் உடல்கள் மீது அமெரிக்க கடற்படை வீரர்கள் சிறுநீர் கழிப்பது போன்ற காட்சி யூ-டியூபில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுபற்றி விசாரணை நடத்த அமெரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

# தெற்கில் நான்கு பேர் கொலை

இங்கிரிய - குரண பகுதியில் மனைவியிடம் தும்புத் தடியால் அடிவாங்கி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்து கணவன் உயிரிழந்துள்ளார்.கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த கணவன் ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். சந்தேகநபரான மனைவி கைதுசெய்யப்பட்டுள்ளார். இங்கிரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதே வேளை, சூரியவெவ பகுதியில் கணவன் மனைவியை கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொலை செய்த சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. சந்தேகநபரான கணவரை கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மற்றும் காலி - உடுகம பகுதியில் இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 34 வயதுடைய ஆணும், 42 வயதுடைய பெண்ணுமே இவ்வாறு சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்திய மீனவர்கள் கடற்படையால் கைது

இலங்கையின் கடற்பரப்பிற்குள் அத்துமீறிப் பிரவேசித்த 13 இந்திய மீனவர்களை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். புல்மோட்டைக்கு சுமார் ஆறு மைல் தொலைவிலுள்ள கடற்பரப்பில் இரண்டு படகுகளில் இருந்த மீனவர்களே கைது செய்யப்பட்டதாக கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை ஏற்றிய படகுகளை கடற்படையினர் திருகோணமலைக்குக் கொண்டு சென்றதாக கடற்படை பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

# கணினி நிலையத்தில் திருட்டு; குப்பிளான் வடக்கில் சம்பவம்

குப்பிளான் வடக்கில் உள்ள பொதுமண்டபத்தில் மூன்று இலட்சம் பெருமதியான ஆறு கணினிகள் நேற்றுமுன்தினம் இரவு இனம தெரியாதவர்களினால் களவாடபபட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் வாழும் குப்பிளான் பகுதி நலன் விரும்பிகளின உதவியுடன் எட்டு கணினிகள் இந் நிலையத்தில் பொருத்தப்பட்டு இளைஞர் யுவதிகளுக்கான கணினி வகுப்புகளும் நடைபெற்று வந்தன. இந்நிலையில் மேற்படி நிலையத்தில் ஆறு கணினிகள் களவாடப்பட்டுள்ளன. இச்சம்வம் குறித்து பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆதிவாசிகள் தலைவருக்கு அச்சுறுத்தல் சிவில் பாதுகாப்புப் படை அதிகாரி கைது

பிபிலை, ரதுகல ஆதிவாசிகளின் தலைவர் மஹபண்டிலாகே சுதாவன்னிலாகே எத்தோ குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த சிவில் பாதுகாப்பு பிரிவை சேர்ந்த உத்தியோஸ்தர் ஒருவர் மரண அச்சுறுத்தல் விடுத்தார் என்றும் தகாத முறையில் பேசி ஆதிவாசிகளின் தலைவரை அவமானப் படுத்தியதாகவும் இகினியாகல பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

அதனையடுத்து நேற்று குறித்த சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். குறித்த சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ரதுகல காட்டு பகுதியில் காணி ஒன்றை அபகரிக்க முற்பட்டதையடுத்து இந்த தகராறு ஏற்பட்டுள்ளதாக லிகினியாகல பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## மின்கம்பிகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மின்சார நிலையத்திற்குச் சொந்தமான மின் கம்பிகள் திருடப்பட்டுள்ளன. சுமார் 6 இலட்சத்தி 65 ஆயிரம் ரூபா பெறுமதியான மின் கம்பிகளே திருடுப்போயுள்ளது

நேற்று முன்தினம் மின்சார சபையின் கணக்காய்வாளரின் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்தே இவ்விடயம் அம்பலமானது. குறித்த மின்கம்பிகள் திருடிச் செல்லப்பட்டுள்ளதாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எஸ்)



யாழ்ப்பாணத் திருவிழாவையொட்டி தமிழர்களின் கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களைப் பிரதிபலிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்திப் பவனியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார். யாழ். கோட்டை முனியர்ப்பர் கோவில் முன்றலிலிருந்து ஆரம்பமான இவ் ஊர்திப் பவனி யாழ். முழுவதிலுமாக செல்கின்றது. தமிழர்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பிரதிபலிக்கும் வகையிலான பல்வேறு அம்சங்கள் இந்த ஊர்திப் பவனியில் இடம் பெறவுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஜனவரி 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.